Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-10 23-04-2005 சனிக்கிழமை ஓசை 64

புதிய இடத்தில் புதுப்பொலிவுடன்



சிறி கருமாரி நகையகம்

அசல் 22 கரட் தங்கத்தில்
தங்கநகைகளை
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

சிறி கருமாரி நகையகம்

76/5,கஸ்தூரியர் வீதி, ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம்.

(சி-11480) தொ.பே: 021-2225365

மனிதாபிமானப் பிரச்சினையில் கூட

# கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள்

# மனமாற்றமின்மையையே காட்டுகிறது!

## அயர்லாந்து சிறப்புத்தூதுக்குழுவிடம் சு.ப. தமிழ்ச்செல்வன்

**கொழும்பிலிருந்து அண்மையில் கிடைத்திருக்கும் தகவல்கள் மனிதாபிமானப் பிரச்சினையில்கூட மனமாற்றம் ஏற்படவில்லை என்பதையே காட்டுகிறது. அத்துடன் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களிடமிருந்து வரலாற்று ரீதியாக ஏற்பட்ட அனுபவம் காரணமாக தமிழ் மக்கள் விரக்தியின் விளிம்பிற்குச் சென்றுள்ளனர் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

நேற்று அயர்லாந்து சிறப்புப் பிரதிநிதி களுடனான சந்திப்பில் அவர் இவ் வாறு கூறினார்.

நேற்று அயர்லாந்து சிறப்புக் குழுவினர் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடன் சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளனர். இதில்

(12ஆம் பக்கம் பார்க்க)



## பொதுக்கட்டமைப்பு விடயத்தில் நோர்வே தலையிடக் கூடாது

### தேசத்தைப் பாதுகாப்பதற்கான தே. மு வலியுறுத்து

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுமிடத்தில் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் தலையிடக் கூடாதென தேசத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய முன்னணி வலியுறுத்தியுள்ளது.

எரிக் சூல்ஹெய்ம் சமாதான முன்னெடுப்புகளை மட்டும் கையாள வேண்டும். அதை விட வேறு விடயங்களில் தலையிடுவதை தாங்கள் வன்மையாகக் கண்டிப்பதாக ஜே.வி.பியின் முக்கிய அமைப்பான தேசத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய முன்னணி அறி

(12ஆம் பக்கம் பார்க்க)



வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள படகு கட்டுமானத் தொழிற்சாலையை அயர்லாந்து சிறப்புத் தூதுக் குழுவினர் பார்வையிடுகையில்...

## கோமாரி அகதி முகாமில் இளைஞர் மீது விசேட அதிரடிப் படையினர் தாக்கு

கோமாரி அகதி முகாமில் விடுதலைப்புலிகளின் பணியாளர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டுள்ளார்.

இது பற்றித் தெரியவருவதாவது; கோமாரி அகதி முகாமில் வைத்து நேற்று மதியம் 12 மணியளவில் சண்முகம் சந்திரன் (வயது 33 ) என்பவர் விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டுள்ளார். அகதி முகாமில் உரையாடிக்கொண்டு இருந்த போது அங்கு வந்த விசேட அதிரடிப்படையினர் அவரை பலமாக தாக்கியுள்ளனர். விடுதலைப் புலிகளின் பணியாளரான இவர் தற்போது மேலதிக சிகிச்சைக்காக பொத்துவில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வன்னியில் மிகையாவுள்ள நெல்லைச் சந்தைப்படுத்த ஏற்பாடு

வன்னியில் மிகையாக உள்ள நெல்லைச் சந்தைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளதாக நிதித்துறை வருவாய்ப் பகுதி அறிவித்துள்ளது.இன்றிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு நெல்லை எடுத்துச் செல்லலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவின் உயர் நிலை அதிகாரியை காணவில்லை

### கடத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம்

பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவின் உயர்நிலை அதிகாரியான ரி. ஜெயரத்தினம் என்பவரைக் காணவில்லையென சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் நேற்றிரவு தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவின் உயர்நிலை அதிகாரியும் மேற்படி பிரிவில் மிகவும் அனுபவம் வாய்ந்தவருமான இவரைக் கடந்த புதன் கிழமை இரவிலிருந்து காணவில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

கல்கிசை வடுது ஒன்றில் இரவு விருந்தொன்றில் கலந்து கொண்ட பின் அவருடன் நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்களுடன் வாகனம் ஒன்றில் சென்றதாகவும் பின் வீடு திரும்பவில்லை எனவும் தெரி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி பெண் பரிதாப மரணம்

(துன்னாலை)

வடமராட்சி துன்னாலைப் பகுதியில் ஒற்றை மின் வடத்தின் மூலம் மின்பெற்று வந்த வேளை, அதனைத் தொட்டத்தில் பெண் ஒருவர் பரிதாபகரமான முறையில் நேற்று உயிரிழந்தார்.

வல்லிபுரக்குறிச்சி துன்னாலை வடக்கைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தாயாரான துரைராஜா தங்கமணி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இது பற்றி மேலும் தெரியவருவதாவது, தொலைக் காட்சிப் பெட்டியில் திரைப்படம் பார்ப்பதற்காக சட்டவிரோதமாக ஒற்றை

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ வரலாறும், சமூகக்கல்வியும் போட்டித் தேர்வு முடிவுகள் வெளியாகின

(அலுவலக செய்தியாளர்)

பாடசாலை மட்டத்தில் கடந்த ஆண்டு தமிழீழ கல்விக்கழகத்தால் நடத்தப்பட்ட தமிழீழ வரலாறும், சமூகக்கல்வியும் போட்டித் தேர்வில் தேசியமட்ட, வலயமட்டங்களில் வெற்றியீட்டியோரின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

தரம்-6,தரம்-7,தரம்-8 மாணவர்களிடையே இப்போட்டி நடத்தப்பட்டிருந்தது. இதில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா அடுத்த மாதத்தின் முதலாவது ஏழலில் (வாரத்தில்) நடத்தப்படவுள்ளது.

இதில் பெருநிலப்பரப்பு மட்டத்தில் வெற்றியீட்டிய ஒன்பது மாணவர்களுக்கு வழமை போல் இவ்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிலாபத்தில் இடம்பெற்ற விபத்தில் யாழ்.நல்லூர் இளைஞன் பலி

### 4 சிறுவர்கள் உட்பட 11 பேர் காயம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த கைஏஸ்வான் ஒன்று சிலாபம் பகுதியில் விபத்திற்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் பதினொரு பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை நான்கு மணியளவில் நடந்த இந்த விபத்தின் போது யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த ராஜன் (வயது 23) என்பவரே மரணமானவராவார் இதன் போது

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரங்கள்

### காணி விற்பனைக்கு

பரந்தன் முல்லைவீதி, புதுக் குடியிருப்பு தேவிபுரம் சந்தியில் இருந்து 200 மீற்றர் தொலைவில் நல்லபலன் தரும் 2 1/2 ஏக்கர் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:- (கோடீஸ்வரன் கடை, தேவிபுரச்சந்தி) (5834)

### முட்டைக்கோழி விற்பனைக்கு உண்டு

எம்மிடம் பிறிமா இன முட்டைக் கோழி (சிவப்பு) மூன்று மாதம் நிரம்பியநிலையிலுள்ளது. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு:- சுடர், கோழி வளர்ப்பகம்,155 விவேகானந்த நகர்,கிளிநொச்சி. (5913)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 07 03 1950



மறைவு 26 03 2005

## சண்முகம் தியாகராசா

*பாசமுள்ள அப்பா...*
*பாதியில் எம்மை விட்டு*
*பரலோகம் சென்றதேனோ*
*வாடா மலராய் வாழ்ந்தீர்*
*வாடுகின்றோம் நாங்கள்*
*வரமாட்டீரோ என்று!*
*கலையாத ஓவியமாய்*
*அழியாத காவியமாய்-எம்*
*உள்ளத்தில் உறைந்த உம்மை*
*காலமெல்லாம் நாம் மறவோம்.*

25.04.2005 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

இல:267,
கரும்புள்ளியான்,
நட்டாங்கண்டல். (சி.11792)

தகவல்:
குடும்பத்தினர்.

### நூல்கள் வந்துள்ளன

புதிய பல தமிழ் நூல்கள் வந்துள்ளன (மொழி,அறிவியல், பகுத்தறிவு, பெண்ணியம், யோகாசனம், மருத்துவம், போராட்டம், சிறுவர் கதைகள், கவிதை, புதினம்) அறிவமுது, கிளிநொச்சி. (6070)

### 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), (சி.11779)

### வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரத்தில் அழககம் (சலூன்)ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. வேலை தெரிந்தவர்களும், வேலை பழக விரும்புபவர்களும் வரலாம். சம்பளம் பேசித்தீர்மானிக் கப்படும். தொடர்புகளுக்கு:- "பொதிகை அழககம்" கனகபுரம் தெரு, கிளிநொச்சி. (6072)

### கேம்பிறிஜ் கல்லூரி O/L DAy/ CLASS

மாணவர்களுக்கு மீட்டல் வகுப்பு 23.04.05 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பம். உதய நகர், கிளிநொச்சி. நிர்வாகி (த.ரூபன்) (6071)

### சீமெந்துக்கல் விற்பனைக்கு உண்டு

எம்மிடம் தரமானசீமெந்து, மணல் கலவையில் தரமான முறையில் அறுக்கப்பட்ட சீமெந்துக்கல் விற்பனைக்குஉண்டு.அளவு-4"x6"x12." தொடர்புகளுக்கு:- தமிழ்கடல்,கட்டடப் பொருள் வாணிபம்,155 யாழ்.சாலை, கிளிநொச்சி. (5912)

# உரப்பயன்பாட்டு பயிற்சி வகுப்பும் விவசாயிகளுக்கு உரம் வழங்கலும்

விவசாயத்தில் விளைச்சலைப் பெருக்கும் ஜிப்சம் உரக்கலவையின் பயன்பாடு பற்றிய பயிற்சி வகுப்பும் நூறு முன்னோடி விவசாயிகளுக்கு இலவசமாக ஜிப்சம் உரக்கலவை வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது.

கிளி.மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செயலகத்தில் மாவட்ட பொறுப்பாளர் மு.செந்தில் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பினை அக்றிக்கோலா நிறுவனத்தின் விற்பனைப்பிரதிநிதி சம்பந்தன் நடத்தினார். பின்னர் ஒரு விவசாயிக்கு 75 கிலோ உரக்கலவை வீதம் வழங்கப்பட்டது. மண்ணில் உள்ள உவர், அமிலம்,இரும்பு ஆகியவற்றின் அதிகரித்த செறிவை மண்ணில் இருந்து வெளியேற்றுவதுடன் பயிர்களுக்குத் தேவையான மக்னீசியம், நாகம் போன்றவற்றுடன் ஒன்பது ஊட்டச்சத்துக்களை வழங்கி விளைச்சலைப் பெருக்குவதே ஜிப்சம் உரக்கலவையின் சிறப்பம்சமாகும்.



| 2007 A/Lகலை, வர்த்தக பிரிவு வகுப்புக்கள்நடைபெறும் நேரசூசி |
|---|
| தமிழ் வகுப்பு:- திரு.ரமேஸ் சனி-10-11 |
| புவியியல் வகுப்பு-திங்கள்,புதன் திரு.ஸ்ரீஸ்குமார் 4-5, 4-5 |
| இந்துநாகரிகம் வகுப்பு-சனி திரு.றமேஸ் 2-3 |
| கணக்கீடு வகுப்பு-திங்கள் திரு.சிவப்பிரகாஸ் 4-5 |
| வணிகக்கல்வி வகுப்பு சனி,ஞாயிறு திரு.அகிலன் 5-6 , 8-9 |
| பொருளியல்வகுப்பு-திங்கள்,வெள்ளி திரு.சாந்தன் 4-5 , 4-5 |
| இடம்:-கேம்பிறிஜ் கல்லூரி, நிர்வாகம், உதயநகர் கிளிநொச்சி. (சி.11781) |

### தவறிவிட்டது

முத்துக்குமார் ரவிக்குமார் இல:92 உதயநகர் மேற்கு, கிளிநொச்சி என்ற முகவரியில் வசிக்கும் எனது சாரதிப்பத்திரம் A01015344-12-04-2005 ஆம் திகதி கிளிநொச்சி மக்கள் வங்கிக்கும், கிளிநொச்சி வைத்தியசாலைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும. (6073)

தகவல்:மு.ரவிக்குமார்.

# நாகபூசணி அம்மன் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

1896ஆம் ஆண்டிற்கு முன்னான காலத்தில் சண்டிலிப்பாய் என்ற இவ்வூரில் சண்முகம் பொன்னம்பலம் என்ற பெரியார் சோதிடக்கலை வல்லுநராக சிறந்து விளங்கினார். அவர் தன் கலையின் மகிமைக்காக நாள் தோறும் யந்திரப் பூசை செய்து அதன் பலத்தால் சிறந்த தொழில் புரிந்தார். இப்பூசை பலத்தால் சக்தி கொண்ட யந்திரம் பின்னைய காலங்களில் சாத்திரியார் உரிய முறையில் வந்தனை செய்யத் தவறியதால் அவர் வீட்டில் பல துக்க சகுனங்களையும், சம்பவங்களையும் தோற்றுவித்தது. இவரோடு கூடவே வாழ்ந்து வந்த நாமுமுத்தர் என்ற பெரியார் சகிக்கக் கூடாமையினால் இராக்காலங்களிலே அது போராளி செய்து பயப்பீதியினைத் தந்தமையினால் அவ்வியந்திரத்தினை வெளியேற்றி இக்கிராமப் பற்றைக்குள் போட்டார். இதன் பின் முருகேசம் பிள்ளை எனும் பெரியவர் கனவில் தோன்றி நாகபூசணி அம்பாள் ஆலயம் வாலாயம் பெற்ற முருகேசுவிடம் சோமவாரநாள் நாள் ஒன்றிலே நாகபூசணி அம்பாள் கனவில் தோன்றி தான் இவ்விடத்தில் அதாவது சீரணியில் எழுந்தருள வேண்டும் என்றும், தனக்கொரு கோயில் அமைக்கும்படி கேட்டதற்கிணங்க சைவமுறைப்படி ஒரு கொட்டகை அமைத்து அதனைப் பூசை செய்து வர அதனை அமரர் வைத்திலிங்கம் அவரிடம் ஒப்படைத்தார். இம்முறைப்படி இனசனமக்கள் எல்லோரும் சேர்ந்து வழிபட்டு வந்தனர். இக்கோயில் காலங்காலமாக வளர்ச்சியடைந்து இன்று நல்ல நிலையில் தோற்றம் பெற்றுள்ளது. முருகேசு தம்பையா அவர்களும் வைத்திலிங்கத்தின் மகன் கௌரிபால சாமியார் அவர்களும் இணைந்து அறங்காவலர் சபை ஒன்றை இணைத்து அமரர் தம்பையாவின் மகன் பரஞ்சோதி என்பவர் இன்றும் சிறப்புற வழி நடத்தி வருகின்றார்.

"அறங்காவலர் சபை",
நாகபூஷணி அம்மன்,
சீரணி, சண்டிலிப்பாய்.




விளம்பர அனுசரணையாளர்கள்

நாகபூசணி மில்
தரமான முதல்த் தர அரிசியை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுகொள்ள ஒரே ஒரு இடம்
"நாகபூசணி மில்"
சீரணிச் சந்தி,
சண்டிலிப்பாய்.
(சி-11809)

பல சரக்குப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
பாடசாலைப் பொருட்கள்
இவை அனைத்தையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள சிறந்த
ஒரே ஒரு இடம்
நாகபூசணி ஸ்ரோர்ஸ்
அரிசி மில்
சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# 50 ஆவது ஆசிய- ஆபிரிக்க மாநாடு இந்தோனேஷியாவில் நேற்று ஆரம்பம்



(ஜகார்த்தா)

**ஐம்பதாவது ஆசிய -ஆபிரிக்க மாநாடு இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் நேற்று ஆரம்பமானது.இந்த மாநாட்டில் சுமார் எண்பது நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.**

இந்தோனேஷியாவின் பண்டுங் நகரில் 1955 ஆம் ஆண்டு ஆசிய ஆபிரிக்க நாடுகளின் முதலாவது மாநாடு நடைபெற்றது. இதன் பொன் விழா நினைவாக இந்த மாநாடு நடைபெறுகின்றது.

முதல் இரண்டு நாட்கள் ஜகார்த்தாவிலும் மாநாடு முதலில் நடைபெற்ற நகரான பண்டுங் நகரில் ஒரு நாளுமாக மூன்று நாட்கள் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

மாநாடு தொடங்கிய நேற்றைய தினம் ஜப்பானின் முன்னைய நடவடிக்கைகள் தொடர்பாக ஜப்பானியப் பிரதமர் மன்னிப்புக் கோரினார்.

கடந்த காலங்களில் ஜப்பான் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக பாரிய அழிவுகள் ஏற்பட்டன. அதே வேளை பல நாடுகள் இதனால் பாதிப்புக்குள்ளாகின. குறிப்பாக ஆசிய நாடுகளே இந்தத் தாக்குதல்களினால் அதிகம் பாதிக்கப்பட்டன.

இதற்கு தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதாக இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜப்பானியப் பிரதமர் ஜூனிச்ஷீரா ஹொய்ஷி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜப்பான் கடந்த காலங்களில் பல தடவைகள் மன்னிப்புக் கோரிய போதிலும் உலகத் தலைவர்கள் பலர் கூடியிருந்த இந்த மாநாட்டில் மன்னிப்புக் கோரியிருந்தமை முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சம்பவமென அரசியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.



இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் நேற்று ஆரம்பமான 50 ஆவது ஆசிய ஆபிரிக்க மாநாட்டில் கலந்து கொண்டுள்ள தலைவர்கள்.

# உலங்கு வானூர்தி மீது தாக்குதல் ஆறு அமெரிக்கப்படையினர் பலி

(பாக்தாத்)

ஈராக்தலைநகர் பாக்தாத் அருகே உலங்குவானூர்தி மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பதினொருபேர் உயிரிழந்துள்ளனர்.

பல்கேரிய நாட்டுக்குச் சொந்தமான மேற்படி உலங்குவானூர்தியில் ஆறு அமெரிக்கப்படையினரும் மூன்று பல்கேரியர்களும், இரண்டு ஈராக்கியர்களும் பயணம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.



வில்னியசில் நடைபெறும் நேட்டோ நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டிற்கு முன்னர் கைகுலுக்கும் ரஷ்ய வெளிநாட்டமைச்சரும் (இடது ) நேட்டோ அமைப்பின் செயலாளரும்.

# தரையிறங்கும்போது விமானம் தீப்பற்றியது ஈரானில் 50பேர் பலி; பலர் படுகாயம்

(தெஹ்ரான்)

ஈரானில் விமானம் தரையிறங்கும் போது தீப்பற்றியதில் அதில் பயணம் செய்த 50 பேர் உயிரிழந்ததுடன் மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

தலைநகர் தெஹ்ரானிலுள்ள மெஹ்ராபாத் விமான நிலையத்தில் புதன்கிழமை இரவு 11 மணிக்கு இந்தச் சம்பவம் நடந்தது.

இராணுவத்துக்குச் சொந்தமான சஹா ஏர்லைன்ஸ் விமானம் பாரசீக வளைகுடாப் பகுதியிலுள்ள கிஷ் என்ற சுற்றுலாத் தீவிலிருந்து 157 பயணிகளை ஏற்றிக்கொண்டு தெஹ்ரான் ஓடுபாதையில் இறங்கியபோது விமானத்தின் இடது பக்க என்ஜினில் தீப்பற்றி பின்னர் ஓடுபாதை முனையில் இருந்த ஆற்றில் விழுந்ததினாலேயே மேற்படி உயிரிழப்பு நேர்ந்துள்ளது.

இந்த சம்பவத்தின் போது குழந்தைகள் உட்பட 157 பேர் விமானத்தில் இருந்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விபத்து நடந்தாகக் கூறப்படுகிறது. கடந்த 2003 இல் ஈரானில் இராணுவ விமானம் ஒன்று மலை மீது மோதி வெடித்துச் சிதறியதில் அதில் பயணம் செய்த 302 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர் அதேபோல் 1988 ஆம் ஆண்டு நடுவானில் பறந்து கொண்டிருந்த ஈரான் பயணிகள் விமானத்தை சந்தேகத்தின் பேரில் அமெரிக்க போர் விமானம் சுட்டு வீழ்தியது. இதில் 290 பயணிகள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வரலாற்றை சரியான நோக்கில் பார்க்க ஜப்பானுக்கு சீனா வலியுறுத்து

வரலாற்றைச் சரியான நோக்கில் பார்க்குமாறு ஜப்பானை சீனா வலியுறுத்தியுள்ளது. 1931 தொடக்கம் 1945 ஆம் ஆண்டுகளில் இராண்டாம் உலகப்போர் காலத்தில் சீனாவை ஆக்கிரமித்திருந்த போது ஜப்பானியர்கள் இளைத்த கொடுமைகள் ஜப்பானைப் பள்ளிவரலாற்றுப் புத்தகத்தில் திருத்திக் கூறப்பட்டுள்ளதாகத் சீனத் தலைமையும், மக்களும், அரசு செய்தி நிறுவனங்களும் குற்றம் சாட்டின. இதையடுத்து சீனாவில் ஜப்பானுக்கு எதிராகவும் ஜப்பானில் சீனாவுக்கு எதிராகவும் கலவரம் வெடித்துள்ளது. இந்நிலையில் சீன வெளியுறவு அமைச்சர் லீஷாவோசிங் கூறியதாக சீனாவுக்கும், ஜப்பானுக்கும் இடையிலான உறவுகள் மேம்படுத்துவதற்கு வரலாற்றை ஜப்பான் சரியான நோக்கில் பார்க்க வேண்டியது அவசியம். என்றார்.



ஈராக்கின் மோசுல் நகரில் "பலஸ்தீனம்" என வர்ணிக்கப்படும் பிரதேசத்தில் தேடுதல் நடத்திவிட்டு வரும் அமெரிக்க இராணுவத்தினரை அவதானிக்கும் கட்டட நிர்மாணப்பணியாளர்கள்.

# "அமெரிக்கா நோயாளியாகிவிட்டது" கடுமையாகக் குறைகூறுகிறார் கார்ப்பசேவ்

(வோஷிங்டன்)

அதிக வெற்றிகளால் ''அமெரிக்கா நோயாளியாகி விட்டது'' என்று கரைந்துபோன சோவியத் யூனியனின் முன்னாள் சனாதிபதி கார்ப்பசேவ் கடுமையாகக் குறை கூறினார்.

முன்பு 1998 இல் கிளாஸ்நாட் என்ற திரை மறைவிலிருந்து பகிரங்கமாக்கும் தத்துவத்தைத் தெரிவித்த அவர் இப்போது ஐ.நா.வில் பேசி மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

கார்ப்பசேவின் இத்தத்துவம் தான் சோவியத் யூனியனைச் சிதைத்து அது பல நாடுகளாகக் காரணமானது. தற்போது ஐ.நா.சார்பில் நடந்த சி.என்.என். செய்தி நிறுவன விருது வழங்கும் விழாவில் பேசும்போது, அமெரிக்காவின் ஆயுதக்குவிப்பு மனோபாவத்தை கடுமையாகச் சாடினார்.

அவர் மேலும் பேசியதாவது; அமெரிக்காவிடம் அணு ஆயுதக்குவியல் இருக்கிறது. வெற்றியையும் தொடர்ந்து பெற்று அந்த வெற்றி தலைக்கேறி அதனால் நோயாளியாகிவிட்டது. மற்ற நாடுகளைப் பார்த்து அணு ஆயுதங்களை வைத்திருக்கக் கூடாது என்று அறிவுரை கூறுகிறது. ஆகவே, அமெரிக்காவிற்கு ஏற்பட்டிருக்கும் இந்த அணு ஆயுதக்குவியல் காரணமாக எழுந்த நோய்க்கு சிகிச்சை தேவை. இதற்கு ரஷ்யா உதவிடத் தயார். இனி உலகிலேயே ஒரே ஒரு சூப்பர் நாடு என்ற நிலையில் இருக்கும் அமெரிக்கா கேட்க முன் வருமா? அதிகளவில் ஆயுதக்குவியலை வைத்துக்கொண்டு மற்றவர்களுக்கு யோசனை சொல்வது எப்படி சரியாகும்,மற்றவர்களுக்குஅணு ஆயுதம் தேவையில்லை என்றும் கூறுகிறது அமெரிக்கா இது காட்டாட்சித் தத்துவம் ஆகும். இவ்வாறு கார்ப்பசேவ் தெரிவித்துள்ளார்.



# உலக அமைதிக்காக போராடியவர் பெனடிக்ட்

## –தனது பெயர் தெரிவிற்கு போப் விளக்கம்

முதல் உலகப் போரின் போது உலக அமைதிக்காக ஓயாது போராடியவர் பதினாறாவது பெனடிக்ட். அவரது அமைதி முயற்சிக்கு மரியாதை செலுத்தும் வகையில் அவரது பெயரை தமது புதிய பெயராக தேர்ந்தெடுத்ததாகப் புதிய போப்ரட்சிங்கர் விளக்கமளித்துள்ளார்.

போப்பாண்டவராகத் தேர்தெடுக்கப்பட்டவர் அப்பதவியை ஏற்க ஒப்புதல் தெரிவித்ததும் தனது இயற்கைப்பெயருக்குப் பதிலாகக் கத்தோலிக்க கிறிஸ்தவ புனிதர்களின் பெயரை சூட்டிக்கொள்ளும் மரபு கி.பி.533ஆம் ஆண்டிலிருந்தே நடைமுறையிலுள்ளது.

அதன்படி புதிய போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜேர்மனியைச் சேர்ந்த ரட்சிங்கர் தனது இயற்பெயருக்குப்பதிலாக பதினாறாவது பெனடிக்ட் என்ற புனிதரின் பெயரை ஏற்றுக்கொண்டுள்ளார். பதினாறாவது பெனடிக்ட் 1914 முதல் 1922 ஆம் ஆண்டு வரை போப்பாண்டவராக இருந்தவர் அவரது காலத்தில் முதல் உலகப் போர் நடந்தபோது கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தை அடிப்படையாகக் கொண்ட நாடுகளே கடுமையாக மோதிக்கொண்டன.

அந்த நெருக்கடியான காலகட்டத்தில் மேற்கத்தைய நாடுகளிடையே அமைதியை நிலைநிறுத்தவும் போரழிவைத்தடுக்கவும் தம்மை அர்ப்பணித்தவர் பெனடிக்ட். இவரது முயற்சியால் தான் முதல் உலகப் போரின்போது விஷவாயுச் குண்டுகளை மக்களுக்கு எதிராக வீசுவதில்லை என்று போரில் ஈடுபட்ட நாடுகள் ஒப்புக் கொண்டன. அத்துடன் ஏழு அம்ச அமைதித் திட்டத்தையும் இவர் வகுத்துக் கொடுத்தார்.



புதிய போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு வத்திக்கானில் உள்ள புனிதபீற்றர் பேராலயத்தின் உப்பரிகையிலிருந்து செவ்வாய்க்கிழமை மக்களுக்கு ஆசீ வழங்கி பெருந்திரளான கூட்டத்தினரைப் பார்வையிடுகிறார். பதினாறாவது பெனடிக்ட்.

## ஒஸ்கார் விருது பெற்ற நடிகை மீது காறித்துப்பிய இராணுவ வீரர் கைது

ஒஸ்கார் விருது பெற்ற ஆங்கில நடிகையின் முகத்தில் முன்னாள் இராணுவ வீரர் காறித்துப்பிய பரபரப்புச் சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது.

ஒஸ்கார் விருது பெற்ற பிரபல அமெரிக்க நடிகை ஜோன் பாண்டா (வயது 67) "இதுவரையில் என்வாழ்க்கையில" என்ற பெயரில் புத்தகம் எழுதி வெளியிட்டு வைத்தார். அதன் வெளியீட்டுவிழா அமெரிக்காவிலுள்ள கான் சாஸ் நகரில் நடந்தது

வியட்நாம் போரின் போது வியட்நாம் இராணுவ வீரர்களை நடிகை ஜேன்பாண்டா அவமரியாதையாகப் பேசியதாகவும் அதற்கு பழி தீர்க்கவே முகத்தில் வெற்றிலை எச்சியை துப்பியதாகவும் மைக்கேல் சுமித் கூறியுள்ளார். இந்தச் சம்பவம் அந்த நிகழ்ச்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# வடக்கில் தெங்குப் பயிர்ச்செய்கை அபிவிருத்திக்கு

# த.பொ.மே.நிறுவனம்-தென்னை அபிவிருத்திச்சபை முயற்சி

## பல்வேறு திட்டங்களை முன்னெடுக்க ஏற்பாடு

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து தென்னை அபிவிருத்திச்சபை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தெங்குப்பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ளது. இதற்கான திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் இடம்பெற்றுள்ளன.**



தென்னிலங்கையிலிருந்து வருகை தந்த தென்னை அபிவிருத்திச் சபையின் தலைவர் ஜயந்தகுண திலக, பிராந்தியப் பொதுமுகாமையாளர் காரியவாசம், தென்னை ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சியாளர்கள் கலாநிதி திருமதி.தம்பா பண்டார நாயக்க, கலாநிதி லலித்பெரேரா ஆகியோர் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட தென்னை நடுகையினை முழுமையாகப் பார்வையிட்டு திருப்தியுற்ற நிலையில் ஆக்கபூர்வமான கருத்துரைகளை வழங்கியதுடன், சிலாவத்தை, அளம்பில், மாத்தளன் பிரதேசங்களில் சுனாமியால் அழிவுற்ற தென்னைகளுக்குப் பதிலாக மீள்நடுகைக்கான தென்னம்பிள்ளைக ளையும் தெங்கு உற்பத்தியாளர்களுக்கு வழங்கியுள்ளனர். மேலும் உரிய நல்லின நாற்றுகளில் நான்கு ஏக்கர் கொண்ட மாதிரிப்பண்ணை ஒன்றினை முல்லை.மாவட்டதில் தென்னை அபிவிருத்திச் சபையின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் அமைத்துக்கொடுத்தல், நல்லின நாற்றுக்களை நடுகை செய்ய விரும்பும் தெங்கு உற்பத்தியாளர்களுக்கு தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் நாற்றுத் தேங்காய்களை வன்னிக்கு தருவித்து சபையின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் நாற்றுக்களை உற்பத்தி செய்து பயனாளிகளுக்கு வழங்குதல்.

அளம்பில், கிளிநொச்சி, பளை போன்ற பிரதேசங்களில் வன்னியில் சபையின் கண்காணிப்பின் கீழ் தெரிவுசெய்யப்படும் விதை தேங்காய்கள் கொண்டு நாற்று மேடைகளை உருவாக்குதல், தேங்காய் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்கான பயன்பாடு மேற்கொள்ளப்படாதமை அவதானிக்கப்பட்ட நிலையில் யாழ்.மாவட்டத்தில இருக்கும் பிராந்திய அலுவலகத்தை வன்னிக்கு மாற்றுவதுடன், யாழ். மாவட்ட அலுவலகத்தை உப அலுவலகமாகப் பயன்படுத்தல்.

தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்றினை வன்னியில் நிறுவுதல், தென்னை மரங்களுக்குத் தேவையான இளங்கன்றுக்கலவைகளையும் (Y.P.M), முதிய கன்றுக்கலவைகளையும் (A.P.M), வன்னியின் தேவைக்கேற்ப களஞ்சியப்படுத்துவதற்கேதுவாக களஞ்சியம் ஒன்றினை அமைத்தல்.

இதுவரைகாலமும் தென்னிலங்கையிலிருந்து விதை தேங்காய்கள் தருவிக்கப்பட்டதற்குப்பதிலாக தேவைப்படும் விதை தேங்காய்களை இங்கே தெரிவின் மூலம் பெறுதலும் நல்லின உயர்ரக விதை தேங்காய்களைத் தருவித்து மாதிரிப்பண்ணை யொன்றை உருவாக்குதலுமான திட்டங்கள் நிறைவேற்றுவதற்கான தீர்மானங்களும் முக்கியமாக எடுக்கப் பட்டுள்ளன. இவர்கள் கடந்த செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் இங்கு கலந்துரையாடலை நடத்தினர்.

## கண்டெடுப்பு

தமிழீழ வைப்பக காசோலைப் புத்தகம் ஒன்று புதுக்குடியிருப்பு-பரந்தன் வீதியில் கண்டெடுக்கப் பட்டுள்ளது. உரியவர்கள் புதுக் குடியிருப்பு பிரதேச அரசியல் துறைச் செயலகத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும். (08)

## கிளிநொச்சி வலய ஆசிரியர்களுக்கான வெள்ளப்பெருக்கு விசேட முற்பணம்

(வவுனியா செய்தியாளர்)

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிப்படைந்த கிளிநொச்சி வலய ஆசிரியர்களுக்கு வெள்ளப் பெருக்கு விசேட முற்பணம் வழங்கப் படவுள்ளது.

கண்டாவளை, பளை,கரைச்சி, பூநகரி ஆகிய நான்கு கோட்டங்களிலும் கடமையாற்றும் ஆசிரியர்களின் வீடுகள், சொத்துக்கள் ஏனைய வீட்டுப் பொருட்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட சேதம் காரணமாக ஒரு மாதச் சம்பளத்தை வட்டியின்றி விசேட முற்பணமாக வழங்க வலயக் கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய விசேட முற்பணக் கொடுப்பனவு வழங்கப்படுவது தொடர்பான சுற்றறிக்கை கிளிநொச்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் கி. சின்னராசாவால் சகல கோட்டக்கல்வி அலுவல்கள் ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விசேட முற்பணக் கொடுப்பனவைப் பெற விரும்பும் ஆசிரியர்கள் உடனடியாக பாடசாலை அதிபர்களுடன் தொடர்புகொண்டு மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து தமது அதிபரிடம் ஒப்படைக்கவும். அதிபர்கள் தமது பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்களை சேகரித்து இம்மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (10)

## அன்னை பூபதி நினைவு தினத்தில் பயிர்ச்செய்கையாளருக்கு உதவி

(அலுவலக செய்தியாளர்)

வாகரைப் பிரதேசத்தில் தியாகி அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய வங்கியினால் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை யினை மேற்கொள்வதற்கென நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. வெருகல் பிரதேசத்தில் கிராமிய அபிவிருத்தி வங்கி மேலாளர் க.ஸ்ரனிஸ்ற் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன்,திருமலை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் காருண்யா, ஆண்டான்குளம் கோட்ட தளபதி அறிவு, வாகரை ஈச்சிலம பற்று மூதூர் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் கலந்துகொண்டு நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பயனாளிகளுக்கு வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## பிரதேச செயலர் கொலையை கண்டித்து அம்பாறையில் பேரணி

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலர் படுகொலையைக் கண்டித்து கடந்த புதன்கிழமை அம்பாறையில் கண்டனப் பேரணி ஒன்று நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டச் செயலகம் முன்பாக நடைபெற்ற இப் பேரணியில் இலங்கை நிர்வாக அதிகாரிகள் பங்குகொண்டிருந்தனர். இப் பேரணி முற்பகல் 11 மணிமுதல் 12 மணி வரை நடைபெற்றுள்ளது. இப் பிரதேச செயலாளர் கடந்த 15ஆம் திகதி இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இக் கொலையைக் கண்டித்தும், அவரது மறைவிற்கு அனுதாபம் தெரிவித்தும், நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அரச ஊழியர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இலங்கை நிர்வாக சேவைகள் சங்க அம்பாறை மாவட்ட கிளைத்தலைவரும், மாவட்ட அரச அதிபருமான ஹேரத் அபய வீர தலைமையில் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் பிரதேச செயலர்கள், உதவிச் செயலர்கள் உட்பட்ட பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.

## கசிப்பு உற்பத்தி, விற்பனை அதிகரிப்பைத் தடுக்க வவுனியாவில் விசேட பொலிஸ் பிரிவு அமைப்பு

(செட்டிகுளம்)

வவுனியாவில் அண்மை நாட்களாக கசிப்பு உற்பத்தி, விற்பனை அதிகரித்திருப்பதாகவும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் வவுனியா சிறிலங்காப் பொலிஸ் மருந்து தடுப்பு பிரிவு சப்இன்பெக்டர் சிறீஸ்கந்த ராஜா தெரிவித்தார்.

விசேட பொலிஸ் குழு அமைத்து மேற்படி நபர்களை கைது செய்யும் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். வவுனியா ஊர்மிளா தோட்டம் பகுதியில் கசிப்பை மறைத்து வைத்திருந்த பெண் ஒருவரும் மற்றும் ஒரு ஆணும் கைது செய்யப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை வவுனியா தேக்கங் காட்டு பகுதியில் கஞ்சா விற்பனை செய்து கொண்டிருந்த 18 வயது இளைஞன் ஒருவன் கைது செய்யப் பட்டுள்ளதுடன் இவ்இளைஞனை விற்பனையில் ஈடுபடுத் திய நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் கழுவா என்று அழைக்கப் படும் மேற்படி நபர் நீண்ட நாட்களாகவே இந்தத் தொழிலை செய்து வருவதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர். (21)

## தொழிலாளர் தின நிகழ்வுகள் தொடர்பான கலந்துரையாடல்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்டத்தில் தொழிலாளர் தின நிகழ்வுகளை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 4.00 மணிக்கு முத்தையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவநாதன்கிஷோர், வினோநோகராதலிங்கம், சதாசிவம் கனகரட்ணம், செல்வம் அடைக்கலநாதன், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல் உட்பட அனைத்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், பொது அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

## மன்னார் மாவட்டத்தில் முன்பள்ளி கல்வி மேம்பாட்டிற்கான கட்டமைப்பு தெரிவு

மன்னார் மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமானது தனது செயற்பாடுகளை விஸ்தரிக்கும் வகையிலும் சிறார்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கெடுக்கும் நோக்குடனும் மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் தனது கட்டமைப்புக்களை பிரதேச வாரியாக நிறுவி வருகின்றது. அந்தவகையில் மடுப் பிரதேசத்திற்கான கட்டமைப்புத் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை பெரியபண்டிவிரிச்சான் மேற்கு பொது நோக்கு மண்டபத்தில் மடு வலய முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் செல்வி.அ.மரிய கொறறறி தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் மடுப்பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இயங்கி வரும் 12 முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், பெற்றோர்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கென ஓர் நிர்வாகக் கட்டமைப்பு தெரியப்பட்டது. இதில் தலைவராக செ.ஏகாம்பரம், செயலாளராக திருமதி.சகாயநாதன் எட்க்சீன், பொருளாளராக கு.மேரிஸ்ரெலாவும், ஏனைய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிகழ்விற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் சே.ஜேசுதாசன், இரணை இலுப்பைக்குளம் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் செல்வன். பெ.ஜெயசீலன், பெரிய பண்டிவிரிச்சான் கிராமஅலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

## பௌர்ணமி கலை இலக்கியக் கருத்தாடல்

(செட்டிகுளம்)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் இந்து வட்டத்தால் நடாத்தப்படும் மாதாந்த பௌர்ணமி கலை இலக்கிய கருத்தாடல் இன்று வவுனியா சுத்தாநந்த இந்து இளைஞர் சங்கமண்டபத்தில் நடைபெறவிருப் பதாக ஏற்பாட்டா ளர்கள் தெரிவித்துள்ளனர். காலை 11மணிக்கு ஆரம்ப மாகும் மேற்படி நிகழ்வில் விஞ்ஞான வளர்ச்சியும் படைப்பிலக்கியமும் என்ற தலைப்பில் நிகழ்வு இடம் பெறவுள்ளது. (21)

## கிடுகு வழங்கல்

மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் அதன் பங்காளி நிறுவனமான வடக்கு-கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் சோபா நிறுவனத்தின் நிதியுதவியுடன் இலுப்பைக்கடவைப் பிரதேசத்தின் சீராளன் குடியிருப்புக் கிராமத்தில் 26 குடும்பங்களிற்கு கிடுகுகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 18ஆம் திகதி காலை 11.00 மணிக்கு வடக்கு-கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் வளாகத்தில் அதன் தலைவர் ஆறுமுகம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதில் இலுப்பைக்கடவைப் பிரதேச அரசியல்துறை மகளிர் பதில் பொறுப்பாளர் யாழ்மகள் மற்றும் வடக்கு கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# தேசியத்தலைவரின் வழியில் நாம் ஒன்று பட்டு பலம் மிக்கவர்களாக பரிணமித்துள்ளோம்



## - பாராளுமன்ற உறுப்பினர் இ.கஜேந்திரன்

(நல்லூர்)

**நாம் அனைவரும் தேசியத்தலைவரின் வழியில் ஒன்றுபட்டுச்சென்று பலம்மிக்கவர்களாக சர்வதேச மட்டத்தில் பரிணமித்துக்கொண்டு இருக்கின்றோம். இன்று நாம் பலம்பொருந்தியவர்களாக இருப்பதினால் சர்வதேச சமூகம் எம்மை ஏற்றுக் கொண்டுள்ளது. அத்துடன் எமது குரலுக்கும் மதிப்பளிக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. எமது கோரிக்கைகளுக்கு சர்வதேசத்தின் பார்வையும் கூட சாதகமாக மாறிக்கொண்டும் வருகின்றது.**

இவ்வாறு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார். அன்னை பூபதியின் பதினேழாவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் நல்லூர் கிட்டு பூங்காவில் திருமதி. சசிரேகா வரதராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இ.கஜேந்திரன் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

காந்தியத்தின் நாடெனவும், சத்தியத்தின் குரெலனவும் கூறப்படும் இந்தியநாடு இவற்றுக்கு மதிப்பளிக்காமையினாலேயே நாம் தியாகி திலீபனையும், தியாகி பூபதித்தாயையும் இழக்கவேண்டியேற்பட்டது.

இந்திய அரசபடைகள் இம்மண்ணில் நிலைகொண்டிருந்தபோது நாம் எமது உரிமையை வேண்டி சாத்வீகப்போராட்டத்தை முன்னெடுத்தோம். காந்தியத்தின் நாடான இந்தியா எமது உரிமையைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையிலேயே சாத்வீகப் போராட்டங்கள் நடத்தினோம்.

இந்திய அரசு சாத்வீகப்போராட்டத்திற்கு மதிப்பளிக்காது துரோகம் இழைத்துவிட்டது. இதனால் நாம் தியாகி திலீபன், அன்னை பூபதி போன்றவர்களைச் சாத்வீக வழியில் இழக்கவேண்டிய நிலைமைக்கு இட்டுச் செல்லப்பட்டோம். நாம் எமது சொந்தக்காலில் நின்றே எமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்பத னையும் உணரக் கூடியதாக இருந்ததுஎன அவர் மேலும் தெரிவித்தார். (33)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவிற்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெறவுள்ள அபிவிருத்தி புனர்வாழ்வுத் திட்டங்கள் பற்றி ஆராயப்படும்.

இதேவேளை யாழ் தீவகத்திலுள்ள ஊர் காவற்துறை உதவி அரச அதிபர் பரிவுக் குட்பட்ட பகுதிகளின் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு வேலைததிட்டங்கள் பற்றி ஆராயும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி இடம்பெறும்.

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும் இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட சகலரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது . (33)

## பயிற்சி நெறி

(சுன்னாகம்)

சுன்னாகத்தில் அமைந்துள்ள மரவேலைப் பயிற்சிப் பாடசாலைக்கு மாணவர் களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.பாடசாலைக்கல்வியை முடித்து வெளியேறிய எட்டாம் வகுப்பு சித்தியடைந்த மாணவர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப் பிக்க முடியும்.பயிற்சிக்காலத்தில் உதவுத் தொகையும் வழங்கப்படவுள்ளது. (41)

## மாபெரும் புத்தகக் கண்காட்சி இவ்வாண்டு நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தேசியக் கலை இலக்கியப் பெருவிழாவை இவ்வாண்டு சிறப்பிக்கும் நோக்கில் நாடு தழுவிய ரீதியில் மாபெரும் புத்தகக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

இப்புத்தகக்கண்காட்சியில் தமது புத்தகங் களையும், காட்சிப்படுத்த விரும்பும் ஆக்ககர்த் தாக்கள் தம்மால் ஆக்கப்பட்ட புத்தகங்களைத் தத்தமது பிரதேசக்கலாச்சார உத்தியோகத் தர்களூடாக காட்சிப்படுத்தலாமென அறிவிக்கப் பட்டுள்ளது. (33)

## தமிழர் தேசிய அபிலாசைகளை பிரதிபலிக்கும் வகையில் யாழ்.குடாநாட்டில் மேதின நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களது தேசிய அபிலாசைகளை பிரதி பலிக்கும் வகையில் "தமிழ்தேசிய உழைப்பாளர் உரிமையுடன் உயர ஒன்றிணைவோம் " என்ற தொனிப்பொருளுடன் யாழ் குடாநாட்டில் இவ்வருட மேதின நிகழ்வுகள் பிரமாண்டமான முறையில் இடம் பெறவுள்ளன.

இதற்கான சகல ஏற்பாடுகளிலும் யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஈடுபட்டுள்ளது.

கூட்டுறவுத்துறை, அரச துறை, கல்விசார் துறை, வங்கித்துறை, தனியார்துறை, தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள். வர்த்தக சங்கங்கள், மாதர் அமைப்புக்கள் முதலிய அமைப்புக்கள் முன்னெப்போதுமில்லாத வகையில் இம் முறை மேதினத்தினை முன்னெடுக்கவுள்ளன.

தமிழ் தொழிலாளர்களுடைய விடிவிற்கும் வாழ்விற்கும் எமது நாட்டின் விடிவுதான் வழிஅமைக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் உணர்வோடு குடாநாட்டு அனைத்து மக்களும் துறைசார்ந்த அமைப்புக்களும் தங்கள் உணர்வுகளினதும் பிரதிபலிப்பினை ஊர்திகளாகவும், உரத்த கோஷங்களாகவும் வானுயர எழுப்பி ஊர்வலத்தில் அணிதிர வுள்ளனர்.

இது தொடர்பான ஒழுங்கமைப்புக் கூட்டம் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சூ.சிறில் தலைமையில் யாழ் ப.நோ.கூ சங்கம் கேட்போர் கூடத்தில் நடை பெற்றுள்ளது. ஊர்வலம் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகி நல்லூரில் முடிவடையும். அங்கு வைத்து பொதுக்கூட்ட மும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## புளியங்கூடல் பிரதேசத்திற்கு மின் வழங்காது புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகத்திலுள்ள ஊர்காவல்துறை புளியங்கூடல் பிரதேசத்திற்கான மின்சார இணைப்புக்களை வழங்குவதில் மின்சாரசபையினர் மெத்தனப்போக்கைக் கடைப்பிடித்து வருவதாக இப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

ஊர்காவல்துறையில் உள்ள சில கிராமங்களுக்கு மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ள நிலையிலும் இக்கிராமத்தை மட்டும் மின்சாரசபையினர் புறக்கணித்து வருகின்றமை குறித்தும் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் இக்கிராமத்தைச்சேர்ந்த மாணவர்கள் இரவு நேரங்களில் குப்பிவிளக்குகளைப் பயன்படுத்தி மிகச் சிரமத்தின் மத்தியிலேயே தம் கல்வியினைத் தொடர்வதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (33)

## தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் மலசல கூடங்கள் அமைப்பு

யாழ். வலிகாமம் வடக்குப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் வாழும் மல்லாகத்திலுள்ள சபாபதிப்பிள்ளை அகதிமுகாம் மற்றும் கண்ணகி அம்மன் அகாதிமுகாம் என்பவற்றிற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவ் அகதி முகாம்களில் வாழும் மக்களின் தொகைக்கு ஏற்ப மலசல கூடங்களின் எண்ணிக்கை அமைக்கப்படாததை கவனத்தில் கொண்டே உடுவில் பிரதேச செயலகத்தின் அனுசரணையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் இங்கு மலசல கூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளனர். (33)

"யுனெஸ்கோ" நிறுவனத்தினால்

## யாழில் நடமாடும் நூலக சேவைக்காக பொது நூலகத்திற்கு பேருந்து கையளிப்பு

(நல்லூர்)

யுனெஸ்கோ நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் மாநகரசபை பொது நூலகத்திற்கு நடமாடும் நூலகத் திற்கான பேருந்து ஒன்று நேற்று காலை கையளிக்கப்பட்டது.

யாழ்.மாநகரசபை பொதுநூல கத்தில் யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதில் அரச அதிபர் கே.கணேஸ் நூலக அபிவிருத்திக் குழு உறுப் பினர் கோ.வி. வேலாயுதம் நகர அபிவிருத்தி உறுப்பினர் சு.பரமநாதன் மற்றும் யுனெஸ்கோ பொறுப்பாளர் ஆர்.பி. பெரேரா ஆகியோர் உரையாற் றினார்கள்.

நூலக சேவைக்கான பேருந்து வண்டியின் சாவியினை ஆணை யாளர் கலாநிதி க.குணராசாவிடம் யுனெஸ்கோ பொறுப்பாளர் ஆர்.பி. பேரேரா கையளித்தார்.

மற்றும் நூலகத்திற்கு பெறுமதி மிக்க மூன்று பிரதியெடுக்கும் இயந்திரங்களையும் வழங்கினார். இவை பொதுநூகத்தின் சேவையை விஸ்த்தரிப்புச் செய் வதற்கென "யுனெஸ்கோ" அமைப் பினரால் நூலகத்திற்கு இவை வழங்கப்பட்டுள்ளன.

பத்து லட்சம் ரூபா பெறுமதியான இந்த நவீனரக நிழல் பிரதி இயந் திரங்களை "யுனஸ்கோ" அமைப பின் பிரதிநிதிகள் யாழ் நூலக அதிகாரி களிடம் கையளித்துள்ளனர். (33,41)



## யாழில் பொது நூலகங்கள் தரமுயர்த்தப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள 13 பொது நூலகங்கள் தரம்-3 இற்கு தரமுயர்த் தப்படவுள்ளன என உள்ளூராட்சி திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் மானிப்பாய், ஆனைக்கோட்டை,பண்டத்தரிப்பு, காங்கேசன்துறை, தெல்லிப்பழை, கோப்பாய் ,நீர்வேலி, புத்தூர்,உரும்பிராய், அச்சுவேலி, உடுவில், சாவகச்சேரி, கொடிகாமம் ஆகியபகுதிகளிலுள்ள பொது நூலகங்கள் அடங்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (33)

## முறை சாராக்கல்வி பயிற்சி நெறி சான்றிதழ்கள் வழங்கும் வைபவம்

(அலுவலக செய்தியாளர்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் கடந்த ஆண்டுக்கான முறைசாரக் கல்வி தொழிற்திறன் பயிற்சி நெறியில் சித்தியடைந்த மாணவர் களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் முறைசாராக் கல்வி தொழிற்திறன் பயிற்சிநெறி கல்விப்பணிப்பாளர் மு.சிவம் தலைமையில் நடை பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வரதராஜா மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அதிபர், யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் மற்றும் தமிழீழ கல்விக்கழக யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஆர்வலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்பரிசளிப்பு வைபவத்தில் கணனி பயிற்சி, சுருக்கெழுத்து, தட்டச்சு, உணவு பதனிடுதல், தலை அலங்காரம், உடைஅமைத்தல், வீட்டு மின்சுற்று ஆகிய பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ்கள் பதினொரு பாடசாலை மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டன.(சு)

# பூமியை நெருங்கும் அபாயம்!



இன்னும் ஒன்பது வருடங்களில் விண்கல் ஒன்று பூமியை மோதவிருப்பதாக அண்மையில் பிரிட்டனின் நியோ ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. QQ47 எனப் பெயரிட்டுள்ள இந்த விண்கல் 2014 ஆம் ஆண்டு ஜுன் 21 ஆம்திகதி பூமியில் மோதுமென கணக்கிடப்பட்டுள்ளது.இது ஆரம்பத்தில் பெறப்பட்ட தகவலாகும்.

எனினும் அமெரிக்காவிலுள்ள நியர் ஆய்வு மையம் இது பூமியில் மோதும் சாத்தியம் ஒன்பது லட்சத்து ஒன்பதினாயிரத்தில் ஒரு பங்கு என பின்னர் அறிவித்துள்ளது. எனினும் இது புவியில் மோதாது என்று சொல்ல முடியாது. அவ்வாறு இது புவியில் மோதும் போதுஇரண்டாம் உலகயுத்தத்தின்போது யப்பானில் போடப்பட்ட அணுகுண்டினால் ஏற்பட்ட இழப்பைவிட பன்மடங்கு அதிக உயிர்உடமை இழப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது. புவியை இந்த விண்கல் வந்து விழுவது தரையிலா, சமுத்திரப் பகுதியிலா என்பதற்கான விடை கிடைக்கப் பெறவில்லை. எனினும் சமுத்திரப் பிரதேசத்திலேயே இது வந்து விழும் என்பது அதிக சாத்தியமாகும்.



இதேபோன்று 1980 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும், விண்கல் ஒன்று புவியிலிருந்து75 ஆயிரம் கிலோ மீற்றருக்கப்பால்புவியை கடந்து சென்றது. 1972 ஆம் ஆண்டிலும் அமெரிக்காவின் ஓரிகன் பிராந்தியத்துக்கு மேலாக சிறு கோள் ஒன்று ஊடுவிச் சென்றது. அதன் போது புவி மயிரிழையில் தப்பியது. 1977 ஆம் ஆண்டிலும் ஐந்து மீற்றர் விட்டமுடைய விண்கல் ஒன்று நான்கு லட்சம் கிலோ மீற்றருக்கு அப்பால் சென்றது.

அதன்படி மேற்கூறப்பட்ட QQ 47 என்ற விண்கல் பூமியில் மோதுமா விலகிச் செல்லுமா என்பது கேள்விக் குறியாவுள்ளது.

இது பற்றி அறிய எண் சோதிட ரீதியில் ஆய்வு நடத்தப்படுகிறது. அதன் மூலம் சம்பவம் நடப்பது பற்றி இரண்டு வருடங்களுக்கு முன்பே அறிந்து கொள்ளலாம்.அப்படியானால் ஏற்படும் சேதம்பற்றியும் அறியலாம். எனினும் இது புவியில் மோதாத வகையில் அதனை ஏவுகணை மூலம் திசை திரும்பலாம் என்றும் நம்பப்படுகின்றது.

இவ்வாறு திசைதிருப்ப முடியும் என பிரபல விண்வெளி புனைகதை எழுத்தாளர் ஆர்தர்சீ கிளார்க்கும் முன்பு தெரிவித்தார். அதற்கான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் இது சமுத்திரப் பகுதியில் விழுமாயின் ஆபத்தைத்தரவல்ல பேரலைகளும் உருவாகி பேரனர்த்தத்தை உருவாக்கலாம் எனவும் கிளார்க் தெரிவித்துள்ளார்.

மேற்படி QQ 47 எனும் 200 மீற்றர் விட்டமுடைய விண்கல் சமுத்திரப் பகுதியில் விழுந்தால் அதனால் உருவாகும் அலைகளின் உயரம் நடுச் சமுத்திரத்தில் 10 மீற்றராகவும், கரையில் அது 100 மீற்றராகவும் இருக்கும்.

எனினும் இதனை இடைநடுவிலேயே அழித்துவிட ஆய்வுகளும் நடைபெற்று வருகின்றன. இது வெற்றியளிக்குமாயின் புவியில் வாழும் மனிதனும், ஜீவராசிகளும் அதிஷ்டமானவர்களாவர்.

# வெடிகுண்டுத் தாக்குதல்களை முன் கூட்டியே அறியும் இயந்திர மனிதன்



நவீன உலகில் வெடிகுண்டுத் தாக்குதலிலிருந்து தப்பிக்கொள்ள கடும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. எனினும் சிலவேளை அதிலும் தவறுகள் ஏற்படுகின்றன. ஆயினும் தற்போது ஐக்கிய நாடுகளின் அமைதிப்படையினர் இதற்குத் தீர்வு காணும் வகையில் இயந்திர மனிதனை கண்டுபிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி இங்குகாணப்படும் இயந்திரம் கமரா ஒன்றையும், கணினியையும் கொண்டு செயற்படுகிறது. சுமார் 360 பாகை சுற்றயல் பிரதேசத்தை இது கண்காணித்து நிகழவிருக்கும் குண்டுத்தாக்குதல்களை முன்கூட்டி அறிவிக்கும் ஆற்றலைக் கொண்டிருக்கிறது.

அவ்வாறு கார்க்குண்டுத்தாக்குதல் ,ஏவுகணைத் தாக்குதல் முதலியவற்றை இனம்கண்டு இது அறிவிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



நவீன உலகில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி புதிய கண்டு பிடிப்புகளை உருவாக்குவதில் யப்பான் முன்னணியிலுள்ளது. அதன்படி படத்தில் காணப்படும் டாக்ஸி ரக வாகனம் துவிச்சக்கர வண்டியைப் போன்று மனித சக்தியால் இயக்கக்கூடிய ஒன்றாகும். பாரம்குறைந்த இவ் வாகனம் 121 நாடுகளில் தற்போது பிரபலம் பெற்று வருகிறது.

# இதயத்தின் சேதமுற்ற பகுதியை அகற்றி நவீன சிகிச்சை!



இதய பாதிப்பு ஆனவர்களுக்கு சத்திரசிகிச்சை செய்கிற போது முதலில் இதயத்தின் எந்தப்பகுதி சேதமடைந்துள்ளது என்பதை கண்டறிந்தாலும், இது நாள் வரையில் சேதமடைந்த அப்பகுதியை என்ன செய்வது என்கிற ஒரு பெருங்குழப்பம் மருத்துவர்களிடம் இருந்து வந்தது. இப்போது நவீன முறையில் சேதமடைந்த இதயப் பகுதியை அகற்றி விட்டு இதயத்தை சுற்றியிருக்கும் சவ்வு போன்ற பகுதியால்,சேதமடைந்த பகுதியைப் பூர்த்தி செய்து அவ்விடத்தில் பாலி எத்தீலின் டெட்ராப் தாலேட் பாலியெஸ்டர்; என்ற செயற்கை வலையால் மூடிவிடும் புதிய மருத்துவ தொழில் நுட்பத்தை இதய மருத்துவர்கள் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளனர். இந்தியாவிலும் புகழ்பெற்ற இருதய அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் இதனைக் கையாண்டு வெற்றி கண்டுள்ளனர். இருதய மருத்துவத்தில் புதியவரவாக வந்திருக்கிற இந்த தொழில் நுட்பம் இருதயநோயினால் இறப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளது.

# நமது குடலுக்குள் 395 வகை பக்டீரியாக்கள்!



அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் நமது குடலுக்குள் வசிக்கும் 395 வகையான பக்டீரியாக்களை அடையாளம் கண்டுள்ளனர். இவற்றில் 60 சதவீதம் பக்டீரியாக்கள்பற்றி இதுவரைவெளியுலகுக்குத் தெரியவில்லை.

கனடாவைச் சேர்ந்த 3 நடுத்தர வயது நபர்களின் மலக்குடலின் 6 பகுதிகளில் இருந்து மலம் மற்றும் மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்யப்பட்டது. அப்போது அதில் இருந்த பக்டீரியாக்களை டி.என்.ஏ. சோதனை மூலம் பகுப்பாய்வு செய்து பார்த்தபோது 80 சதவீதம் பக்டீரியாக்கள் இதுவரை ஆய்வகத்தில் ஒரு முறை கூட வளர்க்கப்பட்டதில்லை என்பது தெரிய வந்தது. ஏனெனில் அந்தப் பக்டீரியாக்கள்வளருவதற்குத் தேவையான ஒட்சிசன் இல்லாத சூழ்நிலை குடலில் தான் காணப்படுகிறது.

அதுபோல மூவரிடம் நடந்த ஆய்வில் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு மாதிரியான பக்டீரியாக்கள் காணப்பட்டன. உணவு முறையில் காணப்படும் மாறுதல்களே இதற்குக் காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். இந்த 395 பக்டீரியாக்களில் பெரும்பாலானவை ஃபெர்மிகியூட்ஸ் மற்றும் பாக்டெராய்ட்ஸ் என்ற இரு பிரிவுகளையும் சேர்ந்தவைகளாக இருந்தன.

மனிதகுடலில் வசிக்கும் இந்தப்பக்டீரியாக்களை சாதாரணமாக நினைத்து விடாதீர்கள்.இவை சத்துப்பொருட்களை விநியோகிக்கும் ரத்த நாளங்களை தூண்டுவதற்கு ஏற்ற வகையில் குடலுக்கு ஊக்கமளிக்கிறது. அது தவிர நோய்களை உண்டு பண்ணும் நுண் கிருமிகள் குடலில் வந்து தஞ்சம் புகுந்து விடாதபடி காவலர் போல நின்று தடுக்கிறது.

# பலகையால் தயாராகும் றோபோ




இதுவரை யப்பான் உலோகங்களால் பல்வகை இயந்திர மனிதர்களை உருவாக்கி வந்துள்ளது. எனினும் ஒரு மாற்றம் கருதி முதன்முதலாக உருவான றோபோக்களைப் போன்று மரத்தினால் (பலகை) ஆன றோபோவை தயாரிக்கும் முயற்சியிலீடுபட்டு வெற்றி கண்டுள்ளது.

# "காட்டுக் கொடிக்குள் கொம்பு சிக்கிய மரையின் கதையாகி விட்டது அரசின் நிலை"




"சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குச் சம்மதம் என்று தெரிவிக்கும் சிலர் நோர்வே ஏற்பாட்டாளரை விரட்டியடித்து சமாதானப்பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்போம் எனக் கூறுகின்றனர். நோர்வே ஏற்பாட்டாளர்கள் இல்லாமல் புலிகள் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று தெரிந்து கொண்டும் இந்த மந்தைகள் கூட்டம் கதைப்பது புதுமையாகஉள்ளது." என சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க கடந்த 6ஆம்திகதி செவனகல மகாவித்தியாலய விளையாட்டரங்கில் கருத்து வெளியிட்டுள்ளார்.

"சமஷ்டி நிர்வாகக் கட்டமைப்புக்கு நூற்றுக்கு எண்பது சதவீதமானவர்களின் ஆதரவு உள்ளதென சனாதிபதி அவர்கள் கூறும் அதேவேளையில் சமஷ்டி கட்டமைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அதை நாங்கள் 20 சதவீதமாகக் குறைத்து சர்வஜன வாக்கெடுப்பை தோற்கடிப்போம்" என சிலர் மேடைகளில் முழங்குகிறார்கள். 1971ஆம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சியின் ஞாபகார்த்த நிகழ்வை அநுராதபுரத்தில் நடத்தியபொழுது ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.இந்த இரண்டு கருத்துக்களும் அரசாங்கத்தரப்பில் இருந்து தான்வெளிவந்துள்ளன. சனாதிபதி அவர்கள் சிலர்என்று மறைமுகமாக ஜே.வி.பியினரைக் குறிப்பிட்டுள்ளார். அமரசிங்கவும் சிலர் என்று சனாதிபதியை மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரேஅரசாங்கத்தில் இரு கட்சியினரும் இப்பொழுது ஒருவரை ஒருவர் மேடைகளில் தாக்கிப்பேசும் அளவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிலமாதங்களுக்கு முன்னதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியில் இருந்து விலகியுள்ளார். ஆனாலும் அவர் தனது கட்சித்தலைமைப் பதவியில் இருந்து விலகவில்லை. ஆகவே அவர் மேடைகளில் வெளியிடும் கருத்துக்களுக்கு முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் ஒரே வீட்டில் இப்பொழுது குடும்பச் சண்டை ஆரம்பமாகியுள்ளது. அரசாங்கம் அமைத்த பிறகுதான் இப்பிரச்சினைகள் ஏற்படவில்லை. அரசாங்கம் அமைப்பதற்கு முன்னதாகவே இப்பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியினருக்கும்,ஜே.வி.பியினருக்கும் இடையில் இனப்பிரச்சினைத் தீர்வு, சொத்துக்களைத் தனியார் மயமாக்கல் போன்ற பிரச்சினைகள், நாட்டைக் குட்டிச் சுவராக்கப் போகின்றது. இவை போன்ற விடயங்களில் கருத்து வேறுபாடுகளின் மத்தியில் 2004 ஆம் ஆண்டு இரு கட்சிகளும் ஒப்பந்தம் செய்து கொண்டன. இவற்றைத் தெரிந்து கொண்டு தான். ஐக்கிய தேசியக்கட்சி அரசை சனாதிபதி கலைத்தார்.ஆனால் இப் பொழுது மரையின்கொம்பு காட்டுக்கொடிக்குள் சிக்கிய கதையாக மாறியுள்ளது.

ஆட்சிப்பீடம் ஏறுவதற்கு முன்னதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இப்பிரச்சினைகள் சம்மந்தமான தெளிவான கொள்கைகள் இருக்கவில்லை.அதனால் தான் இந்த நாட்டையும், நாட்டுமக்களையும் கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிட்டு ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கின்றார்கள். நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உடன்பாடொன்றை ஜே.வி.பியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. எப்படியாவது ஐக்கிய தேசியக்கட்சியை ஆட்சியில்இருந்து விரட்டியடிக்கவேண்டும். அவர்கள் இந்த நாட்டை புலிகளுக்கு கொடுக்கப்போகிறார்கள். நாட்டுச் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்கப்போகிறார்கள். என்று கூறி ஆட்சியைக் கைப்பற்றினார்கள். இங்கு சிங்கள மக்கள் அனைவரும் ஏமாற்றப்பட்டு ஏமாளியானார்கள். ஆனால் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் தான் இவர்களுக்கு இப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது. தற்பொழுது இவர்கள் நாட்டை முன்னேற்ற மாட்டார்கள். நாடு குட்டிச்சுவரானாலும் பரவாயில்லை.கட்சியை வளர்ப்பதில் முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளார்கள். இப்பிரச்சினைகள் சம்பந்தமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் என்ன என்பது ஜே.வி.பியினருக்கு நன்றாகத் தெரியும்.

சமஷ்டி ஆட்சி முறையை நடைமுறைப் படுத்த வேண்டும் என சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுதி பூண்டுள்ளது. ஐ.தே.காவும், சு.கவும் மேடையில் வாக்குறுதிகளை வழங்கி ஆட் சிக்கு வந்த பின் வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டதை ஜே.வி.பி நன்கு அறியும். ஆகவே இப்பிரச்சினைகளுக்கு பொது உடன்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளாமல் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் எதற்காக உடன்படிக்கைகளைச் செய்து கொண்டன.? ஆட்சியைக் கைப்பற்றிய பின் ஜே.வி.பியின் கொள்கைகளுக்கு மாறாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி செயற்பட்டால் அரசாங்கத்தை கவிழ்க்கப்போகிறோம். என சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் பயமுறுத்தி தனது ஆட்டத்திற்கு தாளம்போடவைக்க வேண்டும் என ஜே.வி.பி.நினைத்திருக்கலாம்.ஆனால் ஜே.வி.பியுடன் உடன்படிக்கையை ஏற்படுத்தி ஆட்சியை கைப்பற்றியபின் அவர்களை ஓரங்கட்டலாம் என சிறிலங்கா சுதந்திரக்கட்சி நினைத்திருக்கலாம். கூட்டு ஒப்பந்தம் என்றால் இரண்டு கட்சிகளின் கொள்கைகள் ஒன்றாக இருக்க வேண்டும். நடைமுறைகளில் மாற்றங்கள் இருக்கக் கூடாது. ஆனால் இவை இரண்டும் இக்கட்சிகளுக்குகிடையாது. எனவே கொள்கைகளில் தடுமாற்றங்கள் ஏற்படுவது புதியது அல்ல.

அப்படி இல்லாவிட்டால் இரு கட்சிகளையும் கலைத்து ஒரே கட்சியாக மாற்றியமைத்து ஆட்சி நடத்தவேண்டும். அப்படியாயின் நாட்டில் ஏற்படும் பொதுப்பிரச்சினைக்குத் தீர்மானம் எடுக்கும் கருத்துக்கள் ஒன்றுபட்டதாக இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் இந்தக் கூட்டு குறைந்த ஆயுளையே கொண்டிருக்கும். இப்பொழுது சமஷ்டி ஆட்சிமுறை, சொத்துக்கள் தனியார் மயப்படுத்தல் இந்த இரண்டுக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சம்மதம் அளிக்கின்றது. அதேநேரத்தில் ஜே.வி.பி இந்தக் கொள்கைகளுக்கு எதிர்மாறாகவே செயற்பட்ட வண்ணமுள்ளது. முன்பு நாங்கள் சமஷ்டி ஆட்சி முறை என்றால் என்ன? என்று இந்தநாட்டு அரசியல் வாதிகளிடம் கேட்டறிந்து நாங்கள் கட்டுரைகளை எழுதினோம். அப்பொழுது அனைவரும் ஒருவருக்கு ஒருவர் வித்தியாசமாகவே கருத்துக்களை வெளியிட்டார்கள். உண்மையைச் சொல்லப்போனால் பார்வையற்றவர்களுக்கு யானையின் உருவத்தை விளக்கிய கதையாகவே இந்த அரசியல் வாதிகளின் கருத்து அமைந்தது. ஆனபடியால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் சமஷ்டி ஆட்சிமுறை என்றால் என்ன என்பதை முதலில் தெரிந்திருக்க வேண்டும். 1986 ஆம் ஆண்டு மாகாண சபை ஆட்சி இலங்கையில் அமுல்படுத்துவதைப்பற்றி அவுஸ்திரேலியா மொனேஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த ஜீ.வி வீரமந்திரி கீழ்வருமாறு விபரித்துள்ளார்.

கொள்ளை மாற்றங்கள், அதிகமான யாப்புக்கள் சபைகள் இயங்கினால் இது சமஷ்டி ஆட்சிமுறையாகும். அதாவது சட்டங்கள் இயற்றும்போது பாராளுமன்ற அதிகாரங்களுக்கு முற்படுத்தப்படாமல் அதிகாரங்கள் யாவும் அந்த மாகாணங்களின் கீழ் இயங்கவேண்டும். இதுசம்பந்தமாக சட்டங்கள் இயற்றும் அதிகாரங்கள் யாவும் அந்த மாகாணங்களின் அதிகாரத்திற்குட்படுத்தல் வேண்டும். அப்பொழுது மாகாண அதிகாரசபை அங்கு உருவாகும். எனவே அதிகாரப்பரவலாக்கல் ஆரம்பமாகும்பொழுது சமஷ்டி ஆட்சிமுறை அங்கே உருவாகும். எனவே தற்பொழுது முன்வைத்துள்ள சமஷ்டி ஆட்சிமுறைக்குள் மேற்கூறியவைகள் யாவும் உள்ளடங்கும்.

ஆனால் அதிகாரப்பரவலாக்கம் செய்யும் பொழுது ஒவ்வொரு நாட்டிற்கும் அவை வேறுபட்டவையாகவே அமையும். ஆனால் சமஷ்டி ஆட்சிமுறையில் மாற்றங்கள் இருக்காது. இந்த முறையை சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் ஏன் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றன? இந்த இரண்டுகட்சிகளும் இது சம்பந்தமாக ஒரு உடன்பாட்டுக்கு கட்டாயம் வரவேண்டும். தற்போதைய இனப்பிரச்சினையும், நாட்டின் பொருளாதாரப்பிரச்சினைகளும் இந்த நாட்டில் பயங்கரமாகத் தலைதூக்கும் என்பதனையும் ஜே.வி.பி.நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

33வருடங்கள் அரசியல் வகுப்புக்கள் கருத்தரங்குகளில் முதலாளி வர்க்கத்தின் கீழ் இந்த நாட்டில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாதென மக்களுக்கு கூறி இருக்கின்றார்கள். இப்படி மக்களுக்கு கூறிய ஜே.வி.பி. முதலாளிவர்க்க சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் 2004இல் ஒப்பந்தம் செய்து மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப்போகிறோம் என உறுதியளித்தது.ஆனால் இப்பொழுது உறுதிமொழிகளை நிறைவேற்றமுடியாமல் ஜே.வி.பி. தளம்பிக்கொண்டிருக்கின்றது.

இந்தப்பிரச்சினைகள் யாவும் ஒவ்வொரு வரவுசெலவுத்திட்டத்திலும் வெளிவரும். ஆகவே இந்த இரு கட்சிகளும் சேறுபூசிக்கொள்ளாமல் ஒருநிலைப்பாட்டிற்கு வருவது நாட்டுக்கு நன்மை தரும். அப்படி இவர்கள் ஒரு நிலைப்பாட்டிற்கு வரத்தவறினால் அரசாங்கத்தை நடத்த முடியாது. நாட்டில் தற்போதைய இனப்பிரச்சினைக்கு நல்லதொரு முடிவு காண்பது அவசியம்.

எம்.எஸ். எம்.அயூப்
(லக்பிம)
**மொழியாக்கம் அ.சக்திவேல்**

## மேல்மாகாண சபை விரைவில் கலைப்பு?

(கொழும்பு)

சிறிலங்காவின் மேல்மாகாணசபை கலைக்கப்படும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் மேல்மாகாண முதல்வர் ரெஜினோல்ட் குரேயிற்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக ஜே.வி.பி வாக்களிக்கும் நிலை உருவாகியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஜே.வி.பி.இற்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் தோல்வியடையும் பட்சத்தில் மேல்மாகாண சபையை சனாதிபதி கலைப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தாம் தோல்வியடைந்தால் மேல் மாகாண சபையைக் கலைக்குமாறு சனாதிபதியை கோரப்போவதாக முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

(32)

## நாட்டைச் சரியான பாதையில் வழிநடத்தும் நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வோம்

### -ஆளும்தரப்பு கூட்டாக அறிக்கை

நாட்டைச் சரியான பாதையில் இட்டுச்செல்லும் நோக்கத்தை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதே ஆளும் கூட்டணியின் நோக்கமென ஐ.ம.சு.முன்னணி தெரிவித்துள்ளது. ஐதேகட்சி எத்தகைய தந்திரோபாயங்களை மேற்கொணடாலும் ஆட்சிபீடத்தில் அமர்ந்தபோது ஏற்றுக் கொண்ட பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றும்வரை ஓயப் போவதில்லையென ஐ.ம.சு.முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி பல விமர்சனங்களையும், குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கலாம். ஆனால் ஆளும் கூட்டணி சவால்களை வெற்றிகொண்டு முன்னேற்றப் பாதையில் பயணிப்பது நிச்சயமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இணைஊடகப்பேச்சாளர்களான அமைச்சர் மங்களசமரவீர, பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கேள்வி அறிவித்தல்

## வீடமைப்பு நிர்மாணத்துறை கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு, கட்டடங்கள் திணைக்களம்

(1) யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பிரிவின் நிலத்தளமும் முதலாம் மாடிக்கட்டடப் பகுதிக்கு அலுமினியக் கதவு, யன்னல் செய்து பொருத்துதல், இவ் வேலைக்கான சீலிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகக்கேள்விச் சபைத்தலைவரால் 2005.05.11 மு.ப.10.00 மணிவரை கோரப்படுகின்றது.

(2) கேள்விப்பத்திரங்கள் 2005.05.03 திகதி பி.ப.3.30 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணமாக ரூபா ஐந்நூறு மட்டும் (ரூபா 500/=) செலுத்தி யாழ்ப்பாணம் கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(3) கேள்விகள் மூடப்பட்டவுடன் யாழ்ப்பாணம் கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்தில் உடன் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

(4) கடந்த ஐந்து வருடங்களில் இதேமாதிரியான வேலைகள் செய்த முன்னைய அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டுமே கேள்விப்படிவங்கள் வழுங்கப்படும். கேள்வி ஆவணங்களைப் பெறமுன் இதற்காக ஆவணச்சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(5) பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத்தபால் மூலம் யாழ்ப்பாணம் கடற்கரை வீதி கட்டடங்கள் திணைக்களம், மே/பா, பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) கேள்விச்சபைத் தலைவருக்கு முடிவு நேரத்திற்கு முன்னர் அனுப்பப்படவேண்டும்.

(6) தாமதப்பிணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என கேள்விதாரர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(7) கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன் மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம் கடற்கரைவீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம பொறியியலாளர்,
கட்டடங்கள் திணைக்களம்,
(சி-11791) கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 05 - 01 - 1959



ஆண்டவன் அடியில் 15 - 04 - 2003

## அமரர் சிவசிதம்பரம் ரவீந்திரன்

(கிராமசேவை உத்தியோகத்தர்)

### திதி-23.04.2005

ஆண்டுகள் இரண்டு ஆனதையா
ஆறவில்லை இன்னும் உன் பிரிவுத்துயர்
கரைகின்ற பொழுதினிலே கனவுக்குள் உன்வரவால்
காணுகின்ற இடமெல்லாம் உன் அழகுத் திருவருவால்
ஆற்றாமல் தவிக்கின்றாள் அன்னையவள்
ஆறுதலின்றி புலம்புகின்றாள் உன்துணையவள்
ஆதரவாய் வளர்த்தெடுத்த அன்புச் செல்வங்களும்
அப்பாவின் வரவிற்காய் ஏங்கித்தவிக்கின்றார்கள்
கண்ணீரை மலர்களாக்கி என்றென்றும் உங்கள்
ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கும்

**மனைவி, அம்மா, பிள்ளைகள்,**
**சோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள்,**
(சிவன்கோவிலடி ஒட்டுசுட்டான்)

(சி-11646)

# மௌவல் வேளாண் வலு (தனியார்) வரையறுக்கப்பட்டது
# Mouval Agro Power (PVT) Limited

# பணிநிலை வெற்றிடம்

மௌவல் வேளாண்வலு (தனியார்) வரையறுக்கப்பட்டது நிறுவனத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01. பணிநிலை** :- **பண்ணை முகாமையாளர் (தரம் -03)**
Farm Manager (Grade -03)

*தகைமை* :- ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விவசாய விஞ்ஞானப் பட்டதாரியாக இருப்பதுடன், பண்ணை முகாமைத் துறையில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் பட்டறிவு உடையவராக இருத்தல்வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட விவசாயக் கல்வி நிறுவனமொன்றின் பொருத்தமான கற்கைநெறியினைப் பூர்த்தி செய்திருப்பதுடன், பண்ணை முகாமைத்துறையில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் பட்டறிவு உடையவராக இருத்தல்வேண்டும்.

அல்லது

பண்ணை முகாமைத்துறையில் குறைந்தது எட்டு (08) ஆண்டுகள் பட்டறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

*அகவை* :- 30 ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.

*மாதாந்த ஊதியம்* :- $\frac{8,000 - 12,000}{200 \times 20} + 4,000$

**02. பணிநிலை** :- **பண்ணை முகாமையாளர் (தரம் -03)**
Farm SuPervisor (Grade -03)

*தகைமை* :- பண்ணை மேற்பார்வைப் பணியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டுகளிற்குக் குறையாத பட்டறிவு உடையவராக இருக்கவேண்டும்.

*அகவை* :- 30 ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.

*மாதாந்த ஊதியம்* :- $\frac{6,000 - 9,000}{150 \times 20} + 2,000$

**03. பணிநிலை** :- **பயிற்செய்கை அலுவலர் (பயிலுநர்)**
Cultivation Officer (Trainee)

*தகைமை* :- க.பொ.த உயர்தரம் விஞ்ஞானப் பிரிவில் 03 பாடங்களில் சித்தி பெற்றவராக இருத்தல்வேண்டும்.

*அகவை* :- 19 - 25

*பயிலுநர் காலக்கட்டணம்* :- உரூபா 5,000/=

*பயிலுநர்காலம்* :- 06 மாதங்கள்

**04. பணிநிலை** :- **ஓட்டுநர் (தரம் - 03)**
Driver (Grade -03)

*தகைமை* :- 10 ஆம் தரம் சித்தியடைந்தவராகவும் ஊர்தி ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் (A.D வகுப்பு) உடையவராகவும் இருத்தல்வேண்டும் .

*அகவை* :- 25 ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.

*மாதாந்த ஊதியம்* :- $\frac{4,960 - 7,560}{130 \times 20} + 2,000$

மேற்காட்டப்பட்ட பணிநிலைகளிற்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் கிளிநொச்சியில் அமைந்துள்ள **மௌவல் வேளாண்வலு (தனியார்) வரையறுக்கப்பட்டது.** (இலங்கை வங்கிக்கு அருகாமை) நிறுவனத்திற்கு 2005.05.02 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

**01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.**

**02. ஏனைய தகைமைகளையும், பட்டறிவையும் உறுதிப்படுத்தும். சான்றிதழ்கள்.**

**03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.**

**04. நற்சாட்சிப் பத்திரங்கள்**

**முகாமைத்துவப் பணிப்பாளர்,**
**மௌவல் வேளாண் வலு (தனியார்)**
**வரையறுக்கப்பட்டது.**
Reg. No: N(PBS) 39914

(சி-11807)

## அருள்மிகு இரணைமடு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில்

# தேர்த் திருவிழா சிறப்பிதழ்

# அம்பாளின் அருள் அகிலமெல்லாம் ஆளும்!



அத்தோடு சக்தி வழிபாட்டின் மூலமாகக் கருதப்படும் மதுரை மீனாட்சியின் அம்சமாகவும், மூர்த்தமாகவும் இருந்து வன்னி நிலப்பரப்பில் தாய்த்தெய்வ வழிபாட்டின் தலைவியாகத் திகழ்ந்து இக்கோவில் மூலமூர்த்தியாக இருந்து கடைக்கண் பார்வையில் அருளாட்சி புரிபவள் அன்னை கனகாம்பிகை அம்பாள்.

எனவே தீர்த்தம் தலம் மூர்த்தியாக பெருமைக் குரியவளாகவும் மூன்று சித்திரத் தேர்களில் பிள்ளையார் முருகன் அம்பாள் என பவனிவருபவராகவும் குறுகிய காலத்தில் மூன்று திருக்குடமுழுக்கு கண்டவராகவும் உள்ளார். எனவே இன்றைய தேர்த்திருவிழா நன்நாளில் அம்பாளின் அருட்கருணை நம் எல்லோருக்கும் கிடைத்து இன்நாட்டில் சாந்தி சமாதானம் நிலைத்திருக்க அம்பிகையின் பாதங்களை பணிவோமாக!

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

நா. சோதிநாதன்
தலைவர் அறங்காவலர்சபை
கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில்,
இரணைமடு.




தமிழ் மக்களின் அரசியல் நடவடிக்கைகளுக்கு தலைநகராக விளங்கும் கிளிநொச்சி நகரின் வாழ்வுக்கும் வளத்திற்கும் ஆதாரமாக விளங்குவது இரணைமடு நீர்த்தேக்கம்.

இது ஆண்டு ஒன்றுக்கு சிறு போகம் பெரும்போகமென 30000 ஏக்கரில் நெல் விளைச்சலைத் தந்து கிளிநொச்சி மாவட்டத்தை தானியக்களஞ்சியமாக்குகிறது. மேலும் பெருமளவில் உபஉணவுப் பயிர், காய்கறிகள் உற்பத்திக்கும் உறுதுணையாக உள்ளது. மா, பலா, வாழை போன்ற பழமரங்களும் தென்னை, பனையும் காய்த்துக் குலுங்கக் காரணமாக இருப்பதும் இந்நீரே. இப்பிரதேசத்தில் பால்வளம் பெருகவும் கால்நடைப் பெருக்கத்திற்கும் உதவுவதும் இக்குள நீரே.

வட மாநிலத்தில் மிக நீண்ட ஆறாகிய கனகராயன் ஆறு ஏந்திவரும் நீரை தாங்கி இம்மானிலத்தில் மிகவும் பெரிய குளமாகத் திகழ்வதும் இக்குளமே. இப்புனித நீர் அம்பாளுடைய தீர்த்தமாகும்.

இரணைமடுக் குளக் கட்டுமானப்பணி நடந்த போது யாழ்ப்பாணச் சித்தர் பரம்பரையின் முதல்வரும் மூத்தவருமான யோகர்சுவாமிகள் இங்குபணிசெய்துநடமாடியதால் அவரது திருவுருபட்டும் புனித பூமியாகியது அம்பாள் கொலுவீற்றிருக்கும் இரணைமடுப்பதி.



**இன்று தேரேறிவரும் இரணைமடு கனகாம்பிகை அம்மன் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்!**


**முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை**
யாழ்சாலை, கிளிநொச்சி. யோகபுரம், மல்லாவி. (சி-11743)

**சிவனருட்செல்வன் அரிசி ஆலை.**
(சி-11744) உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு கிளிநொச்சி.

**குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்**
யாழ்சாலை, (சி-11745) கிளிநொச்சி.

**செந்தூரன் களஞ்சியம்**
எம்.எம்.பி. கட்டடம், யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-11742)

**குவி பல்பொறி உதிரிகள் வாணிபம்**
யாழ்சாலை, (சி-11739) கிளிநொச்சி.

**திருவரசி நகைத் தொழிலகம்**
கனகபுரம் தெரு, (சி-11738) கிளிநொச்சி.

**மீனாட்சி நகை மாடம்**
யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-11741)

**ந.கதிரமலை பல்பொருள் வாணிபம்**
அங்காடி, (சி-11740) கிளிநொச்சி.

**வேலன் பல்பொறி உதிரிகள் கட்டடப்பொருள் வாணிபம்**
இரணைமடுச் சந்தி, கிளிநொச்சி. (சி-11737)

**S.M.கோல்ட் ஹவுஸ்** (சி-11735)
இல:46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா. இல:110/2திருவையாறு, கிளிநொச்சி.

**பொன்னம்பலம் அரிசி ஆலை**
யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி. (சி-11736)

**கன்னம்மா அரிசி ஆலை**
(சி-11733) சிவன்கோவில் முன்பாக, 155ஆம்கட்டை, கிளிநொச்சி.

**சும்மா இன் சுவையகம்**
யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-11734) பரந்தன் சந்தி, பரந்தன்.

**இளவரசி நகை மாடம்**
கனகபுரம் தெரு, (சி-11731) கிளிநொர்ச்சி.

**மதியரசி நகை மாடம்**
முல்லைச்சாலை. (சி-11732) தருமபுரம்.

# ஆனையிறவு வெற்றி விழாவை சிறப்பித்து

# மாபெரும் விளையாட்டுப் போட்டி நிகழ்வு



தமிழீழ விடுதலைப்புலிகளால் ஆனையிறவுப் படைத்தளத் தாக்கியழிப்பின் ஐந்தாம் ஆண்டு வெற்றி விழாவையொட்டிய விளையாட்டுப் போட்டிகள் பிரமாண்டமாக நடைபெற்று வருகின்றன.

இவ்விளையாட்டு நிகழ்வுகள் நேற்றுத் தொடக்கம் ஆரம்பமாகி 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளின் ஆரம்ப நிகழ்வாக நேற்றுக் காலை பளை புதுக்காட்டுச் சந்தியில் ஆரம்பமான மரதன் ஓட்டப் போட்டி முகமாலை வரையான 10கிலோ மீற்றர் தூரம் கொண்டதாக அமைந்திருந்தது. இப்போட்டியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமர் அணியினரின் பெண் போராளிகள் கனரக ஆயுதங்களை தாங்கியவாறு இவ்மரதனோட்டப் போட்டியில் பங்குபற்றினர்.

இப்போட்டியினை சோதியா படையணியின் சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் வடபோர்முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன், கேணல் ஜெயம், மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல் யாழினி ஆகியோரும் மற்றும் போராளிகள், பொதுமக்கள் எனப் பெரும்பாலானோர் கலந்து கொண்டனர். (ச,கு)



## கல்வி வளர்ச்சிக்காக விளையாட்டு விழா

கோண்டாவில் ஸ்ரீவாகீஸ்செரி சனசமூக நிலையமும், கல்வி வளர்ச்சிக்கழகமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா சனசமூக நிலையத்தலைவர் செ.கனகசபை தலைமையில் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு நிலைய முன்றலில் இடம் பெறவுள்ளது.

முதன்மை விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி.சு.தெய்வேந்திரன் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (41)

## மானிப்பாய் பரிஸ் வி.கழகம் நான்கு இலக்குகளால் வெற்றி

மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 30 பந்து பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்திய தோற் பந்து துடுப்பாட்டப் போட்டியில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் நான்கு இலக்குகளாலும் ஒரு ஓட்டத்தினாலும் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையேயான போட்டி மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் வி.கழகம் 133 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து இலக்குகளையும் இழந்தது.

லொயிட் 44 ஓட்டங்களையும், வினோதன் 30 ஓட்டங்களையும் ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டனர்.

சாத்வீகன் 14 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் மற்றும் ஜெயதீபன் ஜெயரூபன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஜெயராஜ் 42 ஓட்டங்களையும், ஜெயதீபன் 22 ஓட்டங்களையும், ராக் 19 ஓட்டங் களையும் ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக் கொண்டனர். (41)

## ஹார்மிசன் ஹட்ரிக் சாதனை

இங்கிலாந்துப் பிராந்திய (கவுண்டி) அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் டர்ஹம்-வோசெஸ்டசயர் அணிகளுக்கிடையிலான போட்டியில் ஸ்ரீவ் ஹார்மீசன் பெற்ற ஹட்ரிக் விக்கெட் (அடுத்தடுத்து மூன்று விக்கெட்டுக்கள்) மூலம் டர்ஹம் அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ஹார்மிசனது வேகப்பந்து வீச்சினால் வோசெஸ்டசயர் அணியின் ஜேம்ஸ்பைப், மெட்மேசன், டேவிட்வைலி ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். ஹார்மிசன் 61 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டை வீழ்த்தினார். அவ்வணி 146 ஓட்டங்களுக்கு தனது இரண்டாவது இனிங்சை இழந்தது அதன் முதல் இனிங்ஸ் ஓட்டம் 171 ஆகும். டர்ஹம் தனது முதல் இனிங்ஸில் 286 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது இனிங்ஸில் 31 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய டர்ஹம் அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 32 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

## பிறைன் லாறா அபார ஆட்டம்; மே.தீவுக்கு முதல் இனிங்சில் 296 ஓட்டம்



மேற்கிந்தியத்தீவுகளின் பார்படோ சிஸில் நேற்று முன்தினம் ஆரம்பமான தென்னாபிரிக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி களுக்கிடையிலான மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் முதலாம் நாளான நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவின் போது மேற்கிந்தியத்தீவுகள் அணி ஏழு விக்கெட் இழப்புக்கு 292 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன் படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய வேஷெல்ஹின்ட்ஸ் 14 பந்துகளை சந்தித்து ஒரு ஓட்டத்தைப் பெற்ற நிலையில் மக்காயா என்டினியின் பந்துவீச்சில் ஸ்மித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து கிறிஸ்கெய்ல் சர்வான் ஆகியோர் முறையே பூச்சியத்திலும் 10 ஓட்டங்களிலும் அன்ரூ நெல்லின் பந்து வீச்சில்ஆட்டமிழந்தனர் எனவே அவ்வணி 12 ஓட்டங்களுக்குள் மூன்று முக்கிய விக்கெட்டுக்களை இழந்திருந்தவேளை களமிறங்கிய பிறையன் லாறா அபாரமாக ஆடி சந்தர்போலுடன் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். அவர் 20 பவுண்டரிகள் அடங்கலாக 176 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நெல்லின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். சந்தர் போல் ஏழு பவுண்டரிகள் ஒரு சிக்சர் அடங்கலாக 53 ஓட்டங்களைப் பெற்று ஸோண்டகியின் பந்து வீச்சில் பவுச்சரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். றையன், பிராவோ எட்டாவது விக்கெட் இணையாக தலா மூன்று ஓட்டங்களுடன் களத்திலிருந்தனர். இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பமானதும் மேலதிகமாக நான்கு ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டையும் இழந்தது மே.தீவு.

## வேதனையோடு சென்றோம் வெற்றியோடு திரும்பினோம்



-இன்சமாம்

கடந்த இரு மாதங்களாக நான் நின்மதியாகத் தூங்க இல்லை. அந்த அளவுக்கு இந்தியப் பயணம் வேதனை - நெருக்கடியை ஏற்படுத்தியது. இந்தியாவுடனான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடர் மிகவும் சவாலாக இருந்தது. இந்தியாவில் இருந்த ஒவ்வொரு நாளும் நான் அனுபவித்த வேதனையை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

விமர்சனங்கள் எங்கள் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. இந்தத் தொடரில் எங்கள் முழுத் திறமையையும் காட்ட வேண்டும். தவறான விமர்சனங்களைத்தகர்த்தெறியவேண்டும் என்று நானும் அணி வீரர்களும் சபதம் எடுத்துக் கொண்டோம். அதை நிறைவேற்றி வெற்றியுடன் திரும்பியுள்ளோம்.

வெற்றி என்பது கூட்டு முயற்சி எங்கள் கடின உழைப்பு மட்டுமே வெற்றிக்குக் காரணம் கிடையாது. நாங்கள் வெற்றி பெற வேண்டுமென ஒவ்வொரு நாளும் எங்கள் ரசிகர்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்திருக்காவிட்டால் எங்கள் உழைப்பு வீணாகி இருக்கும். இது பாகிஸ்தான் அணியின் வெற்றி அல்ல. பாகிஸ்தான் கிரிக்கெட் ரசிகர்களின் வெற்றி இந்த வெற்றிக்குப் பிறகே நான் என்னை முழுமையாக தலைவராக உணர்கிறேன். இந்தியப் பயணத்தில் நான் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகிய மூன்று துறையிலும், புதிய முயற்சிகளை மேற்கொண்டேன். அது நல்ல பலன் அளித்தது.

இந்த வெற்றி மட்டும் போதுமானது அல்ல இன்னும் தொடர்ந்து பல போட்டிகளில் வெற்றிபெறவேண்டும் அப்போது தான் பாகிஸ்தான் சிறந்த அணியாகக் கருதப்படும் என்றார்.




## பங்களாதேஷ் பயிற்சியாளராக வட்மோர் தொடர்ந்தும் ஒப்பந்தம்



கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட அவுஸ்திரேலியரான டேவ்வட்மோர் மேலும் இருவருடங்களுக்கு பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு பயிற்சியளிக்க ஒப்பந்தம் செய்துள்ளார். பங்களாதேஷ் இங்கிலாந்துடன் மிகவிரைவில் போட்டிகளில் கலந்துகொள்ளவிருக்கின்றது.

எனினும் இந்திய அணிக்கு பயிற்சியளிப்பதையும் அவர் கைவிடவில்லை எனினும் இந்தியா இதுபற்றி இன்னமும் தனது கருத்தை தெரிவிக்கவில்லையென பி.பி.சியிடம் வட்மோர் தெரிவித்துள்ளார். இருநாடுகளிலும் யார் தன்னை கூடுதலாக விரும்புவார்களோ அவர்களுக்கு தனது பணியை திறம்பட செய்யக் காத்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். எனினும் பங்களாதேஷ் கிரிக்கெட்சபை இளமையான திறமைமிக்க வீரர்களை மேலும் விருத்தி செய்ய அவர் உலகக் கிண்ணம் வரை தொடர்ந்து இருக்க வேண்டும் என்று கூறியுள்ளது. இந்தியப் பயிற்றுநராக பணியாற்றிய ஜோன்ரைட் விலகியதையடுத்து அவ்விடத்தை நிரப்ப வட்மோர் விருப்பம் தெரிவித்திருப்பதும் தெளிவாகியுள்ளது. இவரது பயிற்சிக் காலத்தி[illegible]களாதேஷ் சிம்பாப்வே அணியை [illegible]ட் போட்டியில் வெற்றி கண்டமை [illegible]றிப்பிடத்தக்கது.

## பொண்டிங்கின் துடுப்பை பரிசோதிக்கிறது எம்.சீ.சீ.



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணித் தலைவர் றிக்கி பொண்டிங்கின் துடுப்பை மெல்பேர்ன் கிரிக்கெட் சபை பரிசோதனை நடத்தவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. விளையாட்டின் மரபைப் பேணும் சட்டங்களை உருவாக்கும் மேற்படி சபை பொண்டிங்கின் துடுப்பில் மேற்பரப்பில் கனமான காரீயம் பூசப்பட்டிருப்பது அல்லது மெல்லிய உலோகத்தினால் உறையிடப்பட்டிருப்பது விளையாட்டு விதிகளுக்கு அமைவானதா என்பதை ஆய்வு செய்யும். அத்துடன் அவ்வாறான மட்டையில் படும் பந்துக்கு என்ன நேரிடும் என்பதையும் ஆராயும்.

இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபையிடமும் எம்.சீ.சீ அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இது தொடர்பான அபிப்பிராயத்தை சர்வதேச கிரிக்கெட்சபை அடுத்தமாதம் வெளியிடும். பொண்டிங் கடந்த சனவரி முதல் "கொக்கபுரா" மட்டையைப் பயன்படுத்தி வருகிறார்.

## மாரட்சபின் அதிர்ச்சித் தோல்வி

கோடோ டென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றில் மாரட்சபின் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.



ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் இத்தொடர் நடக்கிறது. இரண்டாவது சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் நடந்தது. அவுஸ்திரேலிய ஓபன் சம்பியனான ரஷ்யாவின் மாரட்சபின், ஆர்ஜென்டினாவின் ஜோஸ் அகாசுசோவை எதிர்த்து விளையாடினார். இப்போட்டியில் எளிதில் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட சபின் 4-6,4-6 என்ற நேர் செட்களில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். மற்றொரு போட்டியில் ஸ்பெயினின் ரபெல் நாடல் 6-0,6-2 என்ற செட்களில் லக்ஷம்பர்க்கின் கைல்ஸ் முல்லரை வென்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

## ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற பெரோஸ்கான் காலமானார்



ஒலிம்பிக் பந்தயத்தில் தங்கப்பதக்கம் வென்று தந்த ஹொக்கி வீரர் பெரோஸ்கான் நேற்று மரணமடைந்தார். அவருக்கு வயது100.

1928 ஆம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் ஒலிம்பிக் பந்தயத்தில் இந்திய ஹொக்கி அணி தங்கப் பதக்கம் வென்றது. பாகிஸ்தான் பிரிவினை ஆவதற்கு முன்பு இந்தியா ஒன்றாக இருந்த போது இந்த வெற்றி கிடைத்தது. அதில் ஒரு வீரராக விளையாடிய பெரோஸ்கான் பிறகு பாகிஸ்தானில் தங்கிவிட்டார். அவர் 100 ஆவது வயதில் நேற்று முன்தினம் மரணமடைந்தார். தூக்கத்திலேயே அவர் உயிர் பிரிந்தது. அவருக்கு இரண்டு மகனும், இரண்டு மகளும் இருக்கிறார்கள். கடந்த செப்ரெம்பர் ஒன்பதாம் திகதி பெரோஸ்கான் தனது 100 ஆவது பிறந்த நாளை விமாசையாகக்கொண்டாடினார்.

## சிந்தனைக்கு



நாம் ஒன்றுபட்ட மக்களாக - ஒரே தேசிய சக்தியாக - அணிதிரண்டு,எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ளவேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 23-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## எதன் அடிப்படையில்...!

ஆழிப்பேரலைஅனர்த்த மீள் கட்டுமானப் பணிக்கான பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விடயம் 99 சதவீதம் பூர்த்தி அடைந்துவிட்டது. இன்னும் சில வாரங்களுக்குள் அது கைச்சாத்தாகலாம் என நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் நம்பிக்கைவெளியிட்டுள்ளார். கடந்த சில தினங்கள் கொழும்பில் தங்கியிருந்து விட்டு நோர்வே திரும்பும் முன்னர் இதனைத் தெரிவித்த எரிக்சூல் ஹெய்ம் தனது அடுத்த பயணத்தின் போது இது பெரும்பாலும் சாத்தியமாகும் எனவும் நம்பிக்கை கொண்டுள்ளார்.

எரிக்சூல்ஹெய்ம் இம்முறை கொழும்பிற்கான பயணத்தின் போது சனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்கவில்லை ஏனெனில் சனாதிபதி சந்திரிகா நாட்டில் இல்லை. அடுத்ததாக எரிக்சூல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பும் வழியில் கட்டுநாயக்காவில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்நிலையில் எரிக்சூல்ஹெய்ம் எதன் அடிப்படையில் 99 சதவீதம் பூர்த்தியாகிவிட்டது என்ற கணிப்பீட்டை வெளியிட்டுள்ளார் என்பதை அனுமானிக்க முடியவில்லை. ஒரு புறத்தில் நோர்வேயின் பொதுக்கட்டமைப்பிற்கான திட்டத்தைப்புலிகள் முழுஅளவில் ஏற்றுக் கொண்டுள்ளனர். அரசாங்கத் தரப்பிலேயே சிறு விடயங்கள் மட்டும் பேசப்படவுள்ளது. என்ற அடிப்படையில் மேற்கொண்டாரா? அன்றி இம்முறை கொழும்பு வரும்போது கொண்டுவந்த புதிய யோசனைகளை ஏற்றுக் கொள்வதில் அரசாங்கத்திற்கு இடையூறுகள்இருக்க மாட்டாது என்ப தினாலா?எனத் தெரியவில்லை.

ஆனால் எரிக் சூல்ஹெய்ம் கூறுவது போன்று பொதுகட்டமைப்பை ஏற்கக் கூடியநிலையில் அரசாங்கம் உள்ளதா? அவர் எதிர்பார்ப்பது போல் அடுத்த முறை விஜயத்தின் போது பொதுக்கட்டமைப்பு தொடர்பான உடன்பாடு கைச்சாத்தாகுமா? என்பவை குறித்து ஆரும் கூறுவது சற்றுச் சிரமானதொன்றே ஆகும். ஏனெனில் சிறிலங்காவின் அரசியல் அதற்கு இடமளிப்பதாக இல்லை.

அரசாங்கத் தரப்பில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மட்டுமே பொதுக்கட்டமைப்புக் குறித்துப் பேசுபவராக உள்ளார். அதுவும் நேரத்திற்கும், தேவைக்கும் ஏற்ப காலத்திற்குக் காலம் மட்டுமே அவர்பேசுகின்றார் இவரைத் தவிர அரசாங்கத்தில் எவரும்– சிரேஷ்ட அமைச்சர்கள் கூட பொதுக்கட்டமைப்பின் தேவை அவசியம் என்பன குறித்து வலியுறுத்தப்போவதில்லை.

மாறாகப் பொதுக்கட்டமைப்பிற்கு மாறான நிலைப்பாட்டைக் கொண்ட கருத்துக்களை வெளிப்படுத்துபவர்களாகவே உள்ளனர். இதில் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி யினர் மட்டுமல்ல ஆளும் கூட்டணியில் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் கூட பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவாகப் பேசுவதாக இல்லை.

எடுத்துக்காட்டாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ண சிறிவிக்கிரமசிங்க போன்றவர்கள் பொதுக்கட்டமைப்பு என்பது தேவை அற்றதொன்று எனக் கூறிவருவதோடு அதற்குத் தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் சுதந்திரக்கட்சியினரின் நிலைப்பாடு எதுவாக இருப்பினும் இறுதியில் சனாதிபதி சந்திரிகாவின் தீர்மானமே முடிவாக இருக்கும் என வைத்துக் கொண்டாலும் பிரதான கூட்டணிக்கட்சியின் தீர்மானம் அத்தகையதாக இருக்கமாட்டாது.

ஏனெனில் ஜே.வி.பி.யினர் பொதுக்கட்டமைப்பு உருவாவதைத் தாங்கள் ஏற்கப் போவதில்லை எனவும்அதற்காக அரசாங்கத்தைக் கவிழ்க்கத் தாயராகவுள்ளதாகவும் தெரிவித்து வருகின்றனர் இறுதியாக தம்மைச் சந்தித்துப்பேசிய அமெரிக்க தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜங்கச் செயலாளர் கிரிஸ்டினா றொக்காவிடமும் இந்நிலைப்பாட்டையே அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.பொதுக்கட்டமைப்புத் தொடர்பான தமது ஆதரவு நிலைப்பாட்டை அமெரிக்கா வெளிப்படுத்தியபோதும் ஜே.வி.பி. தனது நிலைப்பாட்டை மாற்றம் செய்யவோ மறுபரிசீலனை செய்யவோ தயாராகவில்லை.

இந்த நிலையில் நோர்வேயின் விசேடதூதுவர் எதன் அடிப்படையில் பொதுக்கட்டமைப்புக் குறித்த உடன்பாடு தொடர்பில் நம்பிக்கை வெளியிட்டிருக்க முடியும்? சனாதிபதி சந்திரிகா மீதா அன்றி சர்வதேச உதவிகளின் நிமித்தம் இவர்கள் இறங்கிவரு வார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலா?ஆனால் நோர்வே யின் விசேட தூதுவரின் இந்நம்பிக்கை பெரும்பாலும் அர்த்த மற்றதாகவே போகக்கூடும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் பெரிதாக முன்னேற்றம் எதையும் காணமுடியாது ஏனெனில் அவர் பொதுக்கட்டமைப்பிற்காகத் தமது ஆட்சி அதிகாரத்தை பணயம் வைக்கமாட்டார். அவ்வாறு பணயம் வைப்பவராக இருந்தால் ஜே.வி.பி கொடுக்கும் தொல்லைகளைத் தாங்கிக் கொண்டு இதுவரை பொறுமைகாப்பவராக இருக்க மாட்டார். அத்தோடு இவ்விடயத்தில் ஜே.வி.பியுடன் பேச்சுக்களை நடத்தி சர்வதேசத்தின் அபிலாசையைப் புரியவைத்து அவர்களை வழிக்குக் கொண்டு வரச் சனாதிபதியால் முடியாது.

ஆகையினால் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அரசாங்கத்தின் ஆதரவான பேச்சுக்கள் யாவும் காலம் கடத்துவதற்கானதும், சாக்குப் போக்குச் சொல்லி சர்வதேச நாடுகளில் இருந்து நிதியுதவிகள் ஏற்றுக் கொள்வதற்கானது மட்டுமே ஆகையினால் அரசாங்கத்தரப்பில்இருந்து பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவான தற்பொழுது பேசப்படுபவையாகவும் நம்பிக்கை கொள்ளத்தக்கவையாகவில்லை இதனால் பொதுக்கட்டமைப்பு ஒன்று தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்தாகும் வரை அதில் நம்பிக்கை கொள்வது இலவுகாத்த கிளியின் கதையாகவே இருக்கும்.

# தமிழீழ சமூகக் கல்வியும், வரலாறும் போட்டித் தேர்வு - 2004 முடிவுகள்

## தேசியமட்டம்

| தரம் | பெயர் | பள்ளி | வலயம் | புள்ளி | நிலை |
|---|---|---|---|---|---|
| 6 | ஜெயராசா ஜெயமாருதி | கிளி/ இராமநாதபுரம் ம.வி | கிளிநொச்சி | 92 | 1 |
| 6 | இரவிச்சந்திரன் லோகேஸ்வரன் | மு / பாண்டியன்குளம் ம.வி | துணுக்காய் | 91 | 2 |
| 6 | தில்லைநாதன் றொபின்சன் | கிளி/ கிளிநொச்சி ம.வி | கிளிநொச்சி | 88 | 3 |
| 7 | பாலேஸ்வரன் ஆரணன் | மு / கலைமகள் வித்தியாலயம் | முல்லைத்தீவு | 89 | 1 |
| 7 | தீசனா கனகராசா | மு/ கற்சிலைமடு அ.த.க. பள்ளி | துணுக்காய் | 86 | 2 |
| 7 | தீபனா யோகராசா | மு/ கற்சிலைமடு அ.த.க. பள்ளி | துணுக்காய் | 83 | 3 |
| 8 | சயந்தினி செல்வராசா | கிளி/ இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. | கிளிநொச்சி | 92 | 1 |
| 8 | கௌசல்யா விஜயரட்ணம் | மு / முல்லைத்தீவு ம.வி | முல்லைத்தீவு | 87 | 2 |
| 8 | சூசையப்பு வோல்டிசொய்சா | மன் / பெரியபண்டிவிரிச்சான் ம.வி | மடு | 85 | 3 |

## வலயமட்டம்

### துணுக்காய் கல்வி வலயம்

| தரம் | பெயர் | பள்ளி | வலயம் | புள்ளி | நிலை |
|---|---|---|---|---|---|
| 6 | அஜித்தா அன்சலோ | மு / அனிஞ்சயன்குளம் அ.த.க. பள்ளி | துணுக்காய் | 86 | 1 |
| 6 | வைத்தியலிங்கம் கிருஸ்ணதாஸ் | மு / அனிஞ்சயன்குளம் அ.த.க. பள்ளி | துணுக்காய் | 81 | 2 |
| 6 | லவனிதா சாந்தகுமார் | மு / அனிஞ்சயன்குளம் அ.த.க. பள்ளி | துணுக்காய் | 80 | 3 |
| 6 | பிரசனா இராஜகுலசிங்கம் | மு / அனிஞ்சயன்குளம் அ.த.க. பள்ளி | துணுக்காய் | 80 | 3 |
| 7 | இராயேஸ்வரி வேலு | மு / வவுனிக்குளம் அ.த.க. பள்ளி | துணுக்காய் | 61 | 1 |
| 7 | அற்புதராஜா அற்புதரூபன் | மு / கல்விளான் அ.த.க. பள்ளி | துணுக்காய் | 60 | 2 |
| 7 | விநாயகமூர்த்தி அகிலன் | மு / தண்டுவான் அ.த.க. பள்ளி | துணுக்காய் | 53 | 3 |
| 8 | கேதீஸ்வரி சதாசிவம் | மு / விநாயகபுரம் அ.த.க. பள்ளி | துணுக்காய் | 63 | 1 |
| 8 | பெரியதம்பி பிரதீபன் | மு / திருமுறிகண்டி இ.வி. பள்ளி | துணுக்காய் | 62 | 2 |
| 8 | லிந்தா ஆனந்தராசா | மு / கற்சிலைமடு ம.வி | துணுக்காய் | 59 | 3 |
| 8 | செல்வநாயகம் சிந்துஜன் | மு / கோட்டைகட்டிய குளம் அ.த.க. | துணுக்காய் | 59 | 3 |

### கிளிநொச்சி கல்வி வலயம்

| தரம் | பெயர் | பள்ளி | வலயம் | புள்ளி | நிலை |
|---|---|---|---|---|---|
| 6 | வைஷ்ணவி இரவீந்திரன் | கிளி/ புனிததிரேசா பெண்கள் கல்லூரி | கிளிநொச்சி | 87 | 1 |
| 6 | விஜயரதி தருமலிங்கம் | கிளி/ கிளிநொச்சி ம.வி | கிளிநொச்சி | 86 | 2 |
| 6 | முருகானந்தா ரகுராம் | கிளி/ ஊற்றுப்புலம் அ.த.க. பள்ளி | கிளிநொச்சி | 80 | 3 |
| 6 | தர்ஷினி இராஜேந்திரம் | கிளி/ கிளிநொச்சி ம.வி | கிளிநொச்சி | 80 | 3 |
| 7 | அமிர்தலிங்கம் ஆருத்திரன் | கிளி/ கிளிநொச்சி ம.வி | கிளிநொச்சி | 73 | 1 |
| 7 | சந்திரசேகரம் தேவப்பிரியன் | கிளி/ கிளிநொச்சி ம.வி | கிளிநொச்சி | 71 | 2 |
| 7 | சிவக்குமார் கபில் | கிளி/ உருத்திரபுரம் ம.வி | கிளிநொச்சி | 64 | 3 |
| 8 | ரேணுகா அருள்தாஸ் | கிளி/ மத்தியகல்லூரி | கிளிநொச்சி | 80 | 1 |
| 8 | தமிழேந்தி சண்முகரட்ணம் | கிளி/ திருவையாறு ம.வி | கிளிநொச்சி | 68 | 2 |
| 8 | சிவானந்தன் ரஞ்சீவ் | கிளி/ கிளிநொச்சி ம.வி | கிளிநொச்சி | 67 | 3 |

### வவுனியா வடக்குக் கல்வி வலயம்

| தரம் | பெயர் | பள்ளி | வலயம் | புள்ளி | நிலை |
|---|---|---|---|---|---|
| 6 | நிவேதா சிவகுரு | வ/ மதியாமடு விவேகானந்தா த.வி | வவுனியாவடக்கு | 58 | 1 |
| 6 | தனுசா தனராஜ் | வ/ சின்னடம்பன் பாரதி வித்தி. | வவுனியாவடக்கு | 58 | 1 |
| 6 | சஞ்சிகா குமாரசாமி | வ/ சின்னடம்பன் பாரதி வித்தி. | வவுனியாவடக்கு | 54 | 3 |
| 7 | இலக்குப் புள்ளியை எவரும் அடையவில்லை | | | | |
| 8 | இலக்குப் புள்ளியை எவரும் அடையவில்லை | | | | |

### மடுக் கல்வி வலயம்

| தரம் | பெயர் | பள்ளி | வலயம் | புள்ளி | நிலை |
|---|---|---|---|---|---|
| 6 | சக்திவேல் டிலன்ராஜ் | மடு/ கருங்கண்டல் ம.வி | மடு | 74 | 1 |
| 6 | துரைச்சாமி டிலோஜன் | மடு/ விளாத்திக்குளம் அ.த.க. | மடு | 72 | 2 |
| 6 | மிதுஷா புஸ்பராசா | மடு/ வெள்ளாங்குளம் அ.த.க. | மடு | 62 | 3 |
| 7 | திவ்யா பீற்றர் | மன்/ ஆண்டாங்குளம் ம.வி. | மடு | 54 | 1 |
| 8 | மெலனி பிரியங்கா ஜெகநாதன் | மன்/ பெரியபண்டிவிரிச்சான் ம.வி. | மடு | 60 | 1 |

### முல்லைத்தீவு கல்வி வலயம்

| தரம் | பெயர் | பள்ளி | வலயம் | புள்ளி | நிலை |
|---|---|---|---|---|---|
| 6 | கில்மியா அன்ரன் குருஸ் | மு/ இரணைப்பாலை ம. வி. | முல்லைத்தீவு | 86 | 1 |
| 6 | அன்ரன் ஆனந்தகுமார் மிட்சன் | மு/ உடையார்கட்டு ம. வி. | முல்லைத்தீவு | 82 | 2 |
| 6 | சோபியா பேரின்பராசா | மு/ வற்றாப்பளை ம. வி. | முல்லைத்தீவு | 82 | 3 |
| 7 | ஆதித்தன் நிதர்சன் | மு/ சிறி.சுப்பிரமணியம் வித்தியாலயம் | முல்லைத்தீவு | 81 | 1 |
| 7 | யதுர்ஷி செல்லத்தம்பி | மு/ முள்ளியவளை த. வி. | முல்லைத்தீவு | 74 | 2 |
| 7 | சுமிதா இந்துநாதன் | மு/ முள்ளியவளை த. வி. | முல்லைத்தீவு | 64 | 3 |
| 8 | சண்முகம் பவித்திரா | மு/ அம்பலவன் பொக்கணை ம. வி. | முல்லைத்தீவு | 82 | 1 |
| 8 | அன்ரன் ஜீவராஜ் மோகன்ராஜ் | மு/ முல்லைத்தீவு ம. வி. | முல்லைத்தீவு | 79 | 2 |
| 8 | நாகேந்திரம் சுகந்தன் | மு/ முல்லைத்தீவு ம. வி. | முல்லைத்தீவு | 75 | 3 |

### வடமராட்சி கிழக்கு கோட்டம்

| தரம் | பெயர் | பள்ளி | வலயம் | புள்ளி | நிலை |
|---|---|---|---|---|---|
| 6 | தர்சனா தங்கவேலு | யா/ உடுத்துறை ம.வி | வடமராட்சி | 83 | 1 |
| 6 | ஜெனனி கந்தசாமி | யா/ உடுத்துறை ம.வி | வடமராட்சி | 81 | 2 |
| 6 | தர்சிகா சாந்தகுமார் | யா/ மருதங்கேணி.இ.த.க.ப | வடமராட்சி | 80 | 3 |
| 7 | கனுசியா பாலசுந்தரம் | யா/ மருதங்கேணி இ.த.க.ப. | வடமராட்சி | 77 | 1 |
| 7 | பவுனரீனா மோசேஜ் தாசிசியஸ் | யா/ வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா.வி | வடமராட்சி | 64 | 2 |
| 7 | உதயதீபா உதயச்சந்திரன் | யா/ மருதங்கேணி இ.த.க.ப. | வடமராட்சி | 58 | 3 |
| 8 | செல்வக்குமார் தினேஸ்குமார் | யா/ மருதங்கேணி இ.த.க.ப. | வடமராட்சி | 84 | 1 |

(சோ)

# கல்விச் சேவை நிலையம் அடம்பனில் ஆரம்பித்து வைப்பு

தமிழீழ மாணவர் அமைப்பின் ஒழுங்கமைப்பில் இளையோர் செயன்விருத்தி நிறுவனத்தின் கல்விச் சேவை நிலையம் அடம்பனில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

இக்கல்விச் சேவை நிலையம் அடம்பனைச் சொந்த இடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வருபவருமாகிய திருமதி. மகாலிங்கம் அன்னலெட்சுமி குடும்பத்தினரும் அதே இடத்தைச் சேர்ந்த சூரியன் புத்திரன் குடும்பத்தினரும் இணைந்து தமது சொந்தக் காணியையும் வழங்கி நிலையக் கட்டடத்தை அமைப்பதற்கான ரூபா மூன்று லட்சத்து 50 ஆயிரம் நிதியையும் வழங்கியதன் அடிப்படையில் இக் கல்விச் சேவை நிலையம் தமிழீழ மாணவர் அமைப்பினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கல்விச் சேவை நிலையத்தை திருதிருமதி சூரியபுத்திரன் குடும்பத்தினர் நடாவை வெட்டித்திறந்து வைத்தனர். பிரதான மண்டபங்களை மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மதப் பெரியார்கள் திறந்துவைத்தனர்.



இதனைத் தொடர்ந்து கல்விச் சேவை நிலையத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான கொளகை விளக்கம் மன்னார் மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் வேங்கையன் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளா இனியவன், தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் சி. நளன் ஆகியோரால் வைபவரீதியான வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அடிப்படை வசதிகள் இன்றி இருக்கும் இப்பிரதேச மாணவர்களுக்கு இது பயன்மிக்க ஒரு செயற்றிட்டமாகவுள்ளது.

# முல்லை மாவட்டத்தில் மே நாளை எழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மே நாள் நிகழ்வை எழுச்சியாக கொண்டாடுவதற்கான முன்னோடித் திட்டக் கலந்துரையாடலொன்று நேற்று முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பணிமனையில் தேசிய எழுச்சிப் பேராளர் கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ. முகுந்தன் முல்லை மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி, அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர், தேசிய எழுச்சிப்பேரவையினர் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கியதுடன் இதன் போது தீர்மானங்கள் சிலவும் எடுக்கப்பட்டன. மே நாளில் கலந்துகொள்ளும் அனைத்து ஊர்திகளுக்கும் பரிசில்கள் வழங்கப்படுமெனவும் ஒன்று தொடக்கம் பத்து வரை தெரிவான ஊர்திகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இந்நிகழ்வுகள் மே முதலாம் நாள் பிற்பகல் 3.00 மணிக்கு பேரணியுடன் ஆரம்பமாகி இரவு கலை நிகழ்வுகளுடன் நிறைவு பெறுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது முல்லை மாவட்ட அனைத்து பிரதேச மக்களை ஒன்றிணைந்து கலந்து கொள்ளுமாறு முல்லைத்தீவு தேசிய எழுச்சிப் பேரவையினர் அறை கூவல் விடுத்துள்ளனர்.

### சிலாபத்தில்....

காயமடைந்தவர்களில் நான்கு பேர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த வான் அதிகமான வேகத்தின் காரணமாக ஒட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் சுவருடன் மோதி விபத்திற்குள்ளனதாகத் தெரியவந்துள்ளது.

### பயங்கரவாத...

விக்கப்பட்டுள்ளது.

மாநகரை மையமாகக் கொண்டு செயற்பட்ட இவ்வதிகாரி கொழும்பில் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்பட்டவர்களை கைது செய்து விசாரிக்கும் பணியை மேற்கொண்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கு என்ன நடந்தது என்பது தெரியாத போதும் இவர் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### மின்சாரம்....

மின்வடத்தின் மூலம் மின்சாரம் பெறப்பட்டிருந்த வேளை வீட்டின் பின்புறம் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த பெண்மணி தவறுதலாக நிலத்தில் கிடந்த மின்வடத்தினை தூக்கி அப்புறப்படுத்த முற்பட்ட வேளை மின்சாரம் தாக்கிய நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்டு உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்ட வழியில் பரிதாபகரமான முறையில் உயிழந்தார்.

மேற்படி பெண்மணி நாகர்கோவிலிலிருந்து இராணுவ நடவடிக்கையின் காரணத்தால் இடம் பெயர்ந்து தற்காலிகமாக இப்பகுதியில் வசித்து வந்தவராவார். (கா)

### கொழும்பிலிருந்து....

அயர்லாந்து சிறப்புத் தூதுவர் கிறிஸ்பிளட், அபிவிருத்தி நிபுணரான மேரிசட்டன், அயர்லாந்து புதுடில்லி தூதரக துணைத்தலைவர் பற்போணி,அவசர மீட்பு நடவடிக்கை தொழில்நுட்ப ஆலோசகர் அன்னிஹோம்ஸ் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். தாம் சுனாமி அழிவுப் பாதிப்புப் பகுதிகளை பார்வையிட்டதாகவும் அங்கு மேற்கொள்ளப்படுகின்ற பாதிப்புற்ற மக்களுக்கான உதவும் நடவடிக்கை முகாமைத்துவம் தம்மை கவர்ந்ததாகவும் கிறிஸ் பிளட் தெரிவித்தார். அழிவுப் பகுதிகளில் இத்தகைய முகாமைத்துவம் பொருத்தமானது என்பதை இனி உதாரணம் காட்டுவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். நேற்று இவர்கள் கிளிநொச்சியில் சு.ப.தமிழச்செல்வன் அவர்களை சமாதானச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது அயர்லாந்து சிறப்புத்தூதுவர் கிறிஸ் பிளட் சுனாமியால் ஏற்பட்ட இழப்புக்கு தமது அனுதாபங்களை தெரிவித்துக் கொண்டார். [illegible]ங்குள்ள நிலைமைகள் தொடர்பாக தமது வெளியுறவு அமைச்சுக்கு [illegible]றிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அயர்லா[illegible] அரசு ஓர் சிறப்புக்குழுவை இங்கு அனுப்பியதற்கு அய[illegible]லாந்து அரசுக்கும், மக்களுக்கும் சு.ப.தமிழ்ச்செல்வன் அவ[illegible]ன் நன்றியைத்தெரிவித்தார்.

### இராணுவத்திலிருந்து இது வரை 80 ஆயிரம் பேர் தப்பி ஓட்டம்

சிறிலங்கா இராணுவத்திலிருந்து இது வரை 80 ஆயிரத்து 661 பேர் தப்பி ஓடியுள்ளதாகவும் இவர்களில் 2003 ஆம் ஆண்டு வரை பொதுமன்னிப்புக் காலத்தில் 10292 பேர் தம்மை இராணுவத்திலிருந்து விலக்கிக் கொண்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரட்நாயக்கவை மேற்கோள் காட்டி இணையத்தளமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. ஏனைய 70 ஆயிரத்திற்கு மேற்பட்டோரும் இராணுவத்திலிருந்து விலகிக் கொள்ள விண்ணப்பிக்கலாமெனவும் அவர் கூறியுள்ளார்.

### பொதுக்கட்டமைப்பு....

வித்துவ[illegible]

பொதுக் [illegible]மைப்பை உருவாக்குமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் அதிகாரம் சூல்ஹெய்முக்கு கிடையாது என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (32)

### தமிழீழ...

வாண்டும் தமிழீழ வைப்பகத்தால் ஐயாயிரம் ரூபா ரொக்கப் பரிசுகள் சிறுவர் தோட்டக் கணக்கிற்கூடாக வழங்கப்படவுள்ளன என தமிழீழ கல்விக் கழகம் அறிவித்துள்ளது. (பெறுபேறு விபரம் 11 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.)

# ஆனையிறவு படைத்தள வெற்றி விழாவை முன்னிட்டு கலை இலக்கியப் போட்டிகள்



ஆனையிறவு படைத்தள 5ஆம் ஆண்டு வெற்றி விழாவினை முன்னிட்டு போராளிகளிடையே கலை இலக்கியப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்ப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்று வரும் இப் போட்டிகளில் போராளிகள் மிக ஆர்வத்துடன் பங்கு பற்றி வருகின்றனர். கடந்த புதன்கிழமை ஆரம்பமான இப் போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதில் போராளிகளின் நடனப் போட்டிகள் மற்றும் ஏனைய கலை. இலக்கியங்கள் தொடர்பான போட்டிகளும் நடைபெற்று வருகின்றன. இப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டிய போராளிகளுக்கு 28ஆம் திகதி நடைபெறவுள்ள வெற்றி விழா நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது. (ச.கு)

# கண்காணிப்புக்குழுவின் கருத்துக்குறித்து மு.கா.தலைவர் ஹக்கீம் கண்டனம்

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அவர்களுக்குரிய பணிகளில் மட்டும் ஈடுபட வேண்டும் எனவும் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அதிகாரி ஸ்ரீன் முஸ்லிம்கள் தொடர்பில் தெரிவித்துள்ள கருத்துக்கள் தம்மை விசனமடையச் செய்துள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கில் முஸ்லிம் அடிப்படை வாதம் அதிகரித்துள்ளதாகவும் முன்னரைவிட தற்போது முஸ்லிம் பெண்கள் முற்றாகத் தங்களை மறைத்துக் கொண்டு நடமாடுவதை தான் அவதானிப்பதாகவும் ஸ்ரீன் குறிப்பிட்டிருந்தார்.

அதேபோல் தற்போது குர்ஆன் படிப்பதற்கென பல முஸ்லிம்கள் சவுதி ஆரேபியாவிற்கு சென்று வருவதாகவும் இது முஸ்லிம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ள அடிப்படைவாதத்தின் வெளிப்பாடே என்றும் அவர் கூறியிருந்தார்.

முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அத்தகைய மாற்றம் கிழக்கில் அமைதிச் சூழலை பாதிக்கும் என்பதுடன் ஆயுத கலசாரம் ஒன்றையும் தோற்றுவிக்கும் அபாயம் இருப்பதாகவும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரி தெரிவித்திருந்ததார். அவருடைய இந்தக் கருத்துக்கள் முஸ்லிம் மக்களை புண்படுத்துவதாகவும் ஏனைய சமூகங்கள் சந்தேகக் கண்ணோடு முஸ்லிம்களை நோக்கும் நிலையை தோற்றுவித்துள்ளதாகவும் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

தமக்கான பணிகளை செய்வதை தவிர்த்துவிட்டு கண்காணிப்புக் குழுவினர் அரசியல் கருத்துக்களையும், அறிக்கைகளையும் வெளியிடுவதை உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.(32)

— களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் —

# சட்டவிரோதமாக தங்கியிருந்ததாக தமிழ் நாட்டைச் சேர்ந்த 12பேர் கைது

(மட்டக்களப்பு)

தமிழ்நாட்டைச் சேர்ந்த நான்கு குடும்பங்களில் மூன்று பெண்கள் உட்பட 12 பேர் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நேற்று முன்தினம் களுவாஞ்சிக்குடி பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். குருக்கள் மடத்திலுள்ள வீடொன்றிலும் களுதாவளையிலுள்ள மூன்று வீடுகளிலும் விசா இன்றி தங்கியிருந்த சமயம் கைது செய்யப்பட்ட இவர்களில் ஒரு வயது ஆண் குழந்தையொன்றும் மற்றும் 12 வயதிற்குட்பட்ட இருவரும் அடங்குவதாக களுவாஞ்சிக்குடி பொலிசார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட இவர்கள் நேற்று மாலை மட்டக்களப்பு மாவட்ட பதில் நீதவான் கே.தங்கவேல் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். (32)


# சாவு அறிவித்தல்

## கந்தசாமி வள்ளியம்மை

மாதகலைப் பிறப்பிடமாகவும், புதிய கொலணி மாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமியின் மனைவி வள்ளியம்மை 22.04.2005 காலமாகிவிட்டார். அன்னார் வசந்தராணி, பாஸ்கரன், ஜெயராணி, விஜயராணி ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 23.04.2005 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று இறுதிக் கிரியைக்காக பூதவுடல் மாங்குளம் இந்து மயானத்தற்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண் பர்கள் ஆகியோருக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:-
பாஸ்கரன்(மகன்)

புதியகொலணி
மாங்குளம் (5914)


இப்பத்தி[illegible]கை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது